Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

# குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 15-5-1948 சனிக்கிழமை மலர் 36.

# திராவிடர்கழக 18-வது மாகாண மாநாட்டில் பெரியாரவர்களின் தலைமைப் பேருரை.

★

8-5-48, தூத்துக்குடி.

வரவேற்புக்கழகத் தலைவரவர்களே! தாய்மார்களே!! தோழர்களே!!!

திருச்சியில் 1945, செப்டம்பர் 29, 30 தேதிகளில் கூடிய திராவிட கழக 17வது மாகாண மாநாட்டிற்குப் பின் இன்று அதாவது சுமார் 1000 நாள் கழித்து இன்று கூடியிருக்கிறோம். இந்தப்படி நாம் இங்கு கூடி இருப்பதானது இதுவரை நமது எப்படிப்பட்ட மாநாடுகளிலும் கூடி இராத அளவுக்குப் பெருங்கூட்டமாகக் கூடியிருக்கிறோம். இதுவரை நம் கூட்டங்களில் காணப்படாத மக்கள் பலரை அவரவர்கள் தாய்மார்களோடு காண்கின்றோம். இப்படிப்பட்ட மாபெரும் மக்கள் கடலைப்பார்க்க நான் பெருமித மகிழ்ச்சி அடைகிறேன்.

தென் இந்தியர் நல உரிமைச்சங்கம் என்றும், பார்ப்பனரல்லாதார் கட்சி என்றும், ஜஸ்டிஸ் கட்சிஎன்றும் பெயர் கொண்டு அழைக்கப்பட்டுவந்த இந்த ஸ்தாபனமானது 20-8-44ம் தேதி கூடிய சேலம் 16-வது மாகாணமாநாட்டில் 'திராவிடர் கழகம்' என்கின்ற பெயர் பெற்ற பின்பு அதன் நிலையில் பெரியதொரு மாற்றம் ஏற்பட்டு இருப்பதை நான் சொல்லாமலே நீங்கள் உணருவீர்கள்.

இக்கழகம் பெயர்மாற்றம் அடைந்த பிறகு, அதற்குமுன் இக்கழகத்தால் பயன் அனுபவித்து வந்த மக்களும்; பயன் அனுபவிக்கக் கருதி இருந்த மக்களும், இனி தாங்கள் ஏமாற்றம் அடையவேண்டியவர்களே ஆவார்கள் என்று கருதி, நம்மை விட்டு கழகத்தையும் விட்டு சொல்லாமலே போய்விட்டார்கள். அதில் பலர், போகும்போது சும்மா போகாமல் நம்மீது மண்ணை வாரி இறைத்துக்கொண்டே போய் விட்டார்கள். எப்படி இருந்தாலும் நம்மீது என்ன குறைகூறி விஷமப்பிரச்சாரம் செய்தாலும் பலர் போய் விட்டதின் பயனும், விஷமப் பிரச்சாரம் செய்ததின் பயனும் நம் கழகத்திற்கு ஒரு நற்சாட்சிப்பத்திரம் கிடைத்தது போல் ஒரு நல் வாய்ப்பாகவே முடிந்தது. நம்மவர்களாலேயே தொல்லைக்கும், தொந்திரவுக்கும் உட்படவேண்டியதல்லாத்தான ஒரு நல்ல ஸ்தாபனமாகநேர்ந்தது. அதோடு மாத்திரமல்லாமல் நம் கழகக் கொள்கைகளை, திட்டங்களைப்பற்றிப்பேச, முடிந்த அளவு நடக்க, தங்குதடையில்லாத வசதி உள்ள ஸ்தாபனமாகப் பெரும் அளவுக்கு வாய்ப்பாயிற்று. சென்றவர்கள் தம்மாலானவரை நம்மை எதிர்த்தார்கள். தொல்லை கொடுத்தார்கள், நம் ஸ்தாபனத்தின் பெயராலேயே தனி ஸ்தாபனம் ஏற்படுத்தினார்கள். அதற்குப் பார்ப்பனர்கள் தயவையும், பார்ப்பனப் பத்திரிகைகளின் ஆதரவையும் பெற்று, தங்களால் ஆனவரையும் அரசாங்கத்தினுடையவும், பணமூட்டைகளுடையவும் சலுகையும், உதவியும் பெற்று நம் இயக்க வளர்ச்சியைக் கெடுக்கப் பல சக்திகளைக் கடன் வாங்கியும் பார்த்தார்கள். உண்மையைச் சொல்ல வேண்டுமானால் அவர்களது அப்படிப்பட்ட நடவடிக்கைகளால் அவர்கள் ஏமாற்றமடையத்தக்க அளவுக்கு, நம் இயக்கம் வளர்ச்சி அடையத்தக்க பலம் பெற்றது என்று சொல்லலாம். ஆனால் சென்றவர்கள் கதியும், நம்மைக் குறைகூறிப் பிரச்சாரம் செய்தவர்கள் கதியும் என்ன ஆயிற்று? என்று பார்ப்போமானால் "ஜம்புவே என்ன புத்தி........" என்பதாக ஒரு கவி பாடினது போல் ஏமாற்றமும், எதிரிகளை தஞ்சமடைந்து வாழவேண்டிய நிலையும்தான் பெரும்பாலோர் அடைந்தார்கள்.

பலர் நிலையற்றவர்களானார்கள், சிலர் மறைந்து கொண்டார்கள் என்று சொல்லலாம். ஆகவே சேலம் மாநாட்டிற்குப்பின் நம் கழக நிலை நல்ல வளர்ச்சி அடைந்து, இன்று வளப்பத்தில் சென்று கொண்டிருக்கும் தருவாயில் நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

### எனது தலைமை.

இம்மாநாட்டிற்கு நான் தலைவனாக அமர்ந்திருப்பதுபற்றி சில வார்த்தைகள் சொல்லவேண்டியது எனக்கு அவசியம் என்று தோன்றுகிறது. நம் ஸ்தாபனமானது, என்னைத்தலைவனாக அடைந்த 1939-ம் ஆண்டுமுதல் நடைபெற்று வரும் மாகாண மாநாடுகளுக்கு நானே தலைவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன். சேலம் மாநாட்டிற்குப் பிறகு தலைமையில் மாறுதல் ஏற்படவேண்டும் என்றும், ஏற்படும் என்றும் கருதினேன். சில காரணங்களால் அதாவது, கழக விதி சம்பந்தமான காரணத்தால் என்னைத் தலைவனாகத் தெரிந்தெடுக்க வேண்டியதாக ஆயிற்று.

# சம்பூகனை இராமன் ஏன் கொன்றான்?

## காந்தியார்

## கொலைக்குக்காரணம் அதுதான்!

★

ஆனால் இந்தத் தூத்துக்குடி மாகாண மாநாட்டிற்கு நான் தெரிந்தெடுக்கப்பட எவ்வித இன்றியமையாத காரணமும் இல்லை. எனது இஷ்டத்திற்கும், ஆலோசனைக்கும் சிறிதும் சம்பந்தமில்லாமலே என்னைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். இது ஒரு விதத்தில் எனக்குப் பெருமையளிக்கக் கூடிய காரியம் என்றாலும், எனக்கு மகிழ்ச்சியும், திருப்தியும் அளிக்கக்கூடிய காரியமாய் இல்லை. ஆயினும் சம்பிரதாயத்தை ஒட்டியாவது வரவேற்புக் கழகத்தாருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### தோழர்களே! தாய்மார்களே!!

இம்மாநாட்டின் தலைமை ஏற்றவன் என்கின்ற முறையில் தலைமைச்சொற்பொழிவாக ஒரு சொற்பொழிவு ஆற்றியாக வேண்டும். இது முறையும் உங்களால் எதிர்பார்க்கப்படுவதுமாகும். நானோ, இந்த 30 வருட காலமாக பேச்சு, பிரசங்கம், சொற்பொழிவு என்பதாகவே, காலமோ, அகாலமோ, இரவோ, பகலோ, காலையோ, மாலையோ, என்கிற தன்மையில்லாமல் பேசுவதிலேயே என் வாழ்நாளைப் பயன்படுத்திவருகிறவன். எனக்கு ஏற்படும் எப்படிப்பட்ட முடிவு காலமானாலும், அது நான் பேசியதற்கு ஆகவும், சிறப்பாக பேசும் போதே நிகழ்வதாகவும் இருக்கவேண்டும் என்கின்ற ஆசையுடையவன். நீங்கள், பல நூற்றுக்கணக்கான என் பேச்சைக் கேட்டவர்கள். சென்றகால, நிகழ்கால, எதிர்காலத் தன்மைகளைப்பற்றியும் பேசிப் பேசிச் சலித்தவன். நீங்களும் கேட்டுச் சலித்தவர்கள். இந்தமாநாட்டுத் தலைமை உரைக்கு என்று, நான் எதையும் கொண்டு இருக்கவில்லை. இக்கூட்டத்தைக் கண்டு, நான் விளக்கமுடியாத மகிழ்ச்சியையும், பெருமையையும், நம்பிக்கை மனக்கோட்டையையும் அடைகிறேன் என்பதுதான் என் மனதைப் பூராவையும் ஆக்கிரமித்த விஷயங்களாகும். என்றாலும் நான் ஏதாவது மேற்கொண்டும் பேசவேண்டும் என்பது சம்பிரதாயம். சம்பிரதாயப்படியே பேசுகிறேன்.

### காந்தியார்.

தோழர்களே! இன்று இந்த ஸ்தானத்தில்இருக்கும் நான் முதலாவதாகப் பேசவேண்டியது பெரியார் காந்தியாரின் மறைவுபற்றி—கொலைபற்றி. பேசவேண்டியது சம்பிரதாயப்படி மாத்திரம் அல்லாமல் உண்மைப்படியும், கடமைப்படியும் பேசவேண்டியதாகும். காந்தியார் மறைவு திராவிட நாட்டுக்கும், திராவிட மக்களுக்கும் மகத்தான நட்டமும், மாபெரும் ஏமாற்றமடையத்தக்க வாய்ப்புமாகும். காந்தியார் கொலை திராவிட மக்களின் எல்லையற்ற ஆத்திரமும், இரத்தக் கொதிப்பும், திடுக்கிடும்படியான விறுவிறுப்பையும் கொள்ளத்தக்க காரியமாகும். இதைச் சொல்லுகிறபோது என்மனம் பதைக்கிறது, கைநடுங்குகிறது, நாவறட்சியடைகிறது, இதயம் துடிக்கிறது. அப்படிப்பட்ட ஒரு மனிதரை எப்படித்தான் கொல்ல, இப்படிப்பட்ட ஒரு பார்ப்பனனுக்கு எண்ணம் வந்தது, கைவந்தது என்பதை நினைத்தால், இராமாயணக் கதையில் வரும் ஒரு இடம்தான் சற்று அதை விளக்குகிறது.

அதாவது, "சம்பூகன் என்ற ஒரு சூத்திரன் பிரார்த்தனை (தபஸ்) செய்ததற்காகச்சூத்திரனுக்குத் தபசுசெய்ய உரிமை இல்லை என்கின்ற காரணங் கற்பித்து பார்ப்பனர்களின் தூண்டுதலின்மேல் ராமன் என்கின்ற ஒரு ஆரியனால் கண்டதுண்டமாக்கப்பட்டான்" என்கிற இடம்தான் இக்கொலையின் காரணத்துக்கு சிறிது விளக்கத்துக்குரியதாகிறது. ஆகவே காந்தியார் கொலையானது ஒரு தனிப்பட்ட அல்லது ஒரு புதிய சம்பவமல்ல என்பதும், இது ஆரியர்—சூத்திரர் (திராவிடர்) அல்லது ஆரியர்—ஆரியரல்லாதவர் என்கின்ற இனப்போராட்டமுறை என்றும் அதுவும் இந்து மதப்புராணத் தத்துவங்களைப் பின்பற்றியதுதான் என்றும் நிச்சயிக்க வேண்டியதாகிறது. 'காந்தியார் சம்பூக இனத்தானாகவும், கொன்றவன் இராமன் இனத்தானாகவும் இருந்ததுதான் இக்கொலைக்குக் காரணமே ஒழிய மற்றபடி தனிப்பட்ட மக்கள் மீதோ, தனிப்பட்ட குணங்கள் மீதோ குறைகூறுவது பொருத்தமற்றதாகும்.

காந்தியார் மறைவை நான் ஏன் திராவிட நாட்டுக்கு, திராவிட மக்களுக்கு எல்லையற்ற நட்டம் என்று சொல்லுகிறேன்? இப்படிச் சொல்லுவதன் மூலம் ஏதாவது லாபம், நலம் அடையலாமென்கிற சமயோசித புத்தியாலா? இல்லவே இல்லை! ஒருக்காலுமில்லை!! இப்போது இப்படிச் சொல்லுவதால்எனக்கோ, நம் கழகத்துக்கோ எவ்வித நன்மையும் ஏற்படாது. நம்மவர்களிலேயே சிலர் என்னை வெறுக்கக் கூடும். மற்றும் ஒரு கூட்டத்தார் அதுவும் செல்வாக்குள்ள ஒரு கூட்டத்தாரின் வெறுப்புக்குத்தான் ஆளாக நேரிடும். பின்னை ஏன் சொல்லுகிறேன் என்றால், என்னைப்போலவே காந்தியாரும் தாம் ஒரு "சூத்திரன்" என்பதை நன்றாய் உணர்ந்து கொண்டார். இந்துமதம் திருத்த முடியாதது என்பதையும் உணர்ந்து கொண்டார். இந்தியா, இந்தியர், இந்துமதம் என்பதாக ஒன்று இல்லையென்றும் சிந்து நதியால் இந்தப் பெயர் ஏற்பட்டதென்றும், இந்து முஸ்லீம் ஒற்றுமைக்குக் கேடாக இருப்பது மத உணர்ச்சியே என்றும், தீண்டாமை, அரிஜனன் என்பது இந்துமத உணர்ச்சி உள்ளவரை மாற்றமடையமுடியாததுஎன்றும், ஒரே கடவுள்தான்உண்டு. அதுதான் அல்லா, காட் (God) ராம் என்றும், குரான் இந்துக்கள் படிப்பதற்குரியதென்றும், அதைப் பாராயணம் செய்ய வேண்டுமென்றும், இந்துக்கள் முஸ்லிம்களுக்கு மிக்க தீங்கு இழைத்துவிட்டார்கள் என்றும், அவற்றைப் பரிகரிக்காமல் மேலால் ஒரு காரியம் செய்யத் தன்னால் அனுமதிக்க முடியாதென்றும் பச்சையாகக் கூற ஆரம்பித்துவிட்டார். பார்ப்பனர்களின் உண்மையான தன்மையை நன்றாய் அறிந்து கொண்டார். தன்பெயரைச் சொல்லிப்பதவிக்கு வந்தவர்களையும், அவர்களின் அக்கிரமங்களை, கொள்ளையை, ஒழுக்கஈனமான, நாணய ஈனமான காரியங்களை நன்றாய்த் தெரிந்துகொண்டார். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால்; தான் பல தவறு செய்துவிட்டதாகவும், அவற்றிற்குப் பரிகாரம் செய்ய வேண்டியது மிகவும் அவசியம் என்றும் கருதி பரிகாரத்தில் பிரவேசித்தார். அப்பரிகாரமானது அவரால் நடைபெற்றேதீரும். அப்பொழுது திராவிடர் கழகக் கொள்கையும், திட்டமும் தான் இந்தியா முழுவதற்கும் ஏற்படவேண்டியதாகும். நமக்கும் சட்டப்படி, சாஸ்திரப்படி, மதப்படி சூத்திரப்பட்டம் ஒழியும், நம் நாடும்பிரிந்து நமக்கு கிடைக்கும், இதில் சந்தேகமில்லை. காந்தியார் திடீரென்று தமது பழைய கருத்துக்களிலிருந்து இப்படித் திரும்பியதற்குக் காரணம், பார்ப்பனர் தன்மையும், தனது முக்கிய சிஷ்யர்கள் யோக்கியதையும் அவருக்கு நன்றாய் விளங்கிவிட்டதுதான்.

உதாரணமாக திராவிட நாட்டிலிருந்து பார்ப்பனர்கள் டெல்லி சென்று காந்தியாரிடம் "மகாத்மாவே" எங்கள் சென்னை மாகாணத்தில் பிராமணப் பிள்ளைகளுக்குப் படிப்பதற்குப் பள்ளியில் இடம் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். சென்னை மாகாண மந்திரிகள், பிராமணத்துவேஷிகளாய்இருக்கிறார்கள். கேள்விமுறை இல்லையா"

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# திராவிடர் கழகம் ஒரு பிரச்சார இயக்கம்.

★

என்று பிராது சொன்னதற்குக் காந்தியார் சொன்ன பதில் என்னவென்றால்; "ஏனப்பா நீதான் பிராமணனாயிற்றே, உனக்கு இந்தப்படிப்புஎதற்கு? நீபோய்க்கடவுளைத்தேடி மக்களுக்கு காட்டு! போ! கல்வி இல்லாத மற்ற வகுப்புப் பிள்ளைகள் படிக்கட்டும் அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்காதே! போ" என்று சொல்லிவிட்டார். இதிலிருந்தும் "இந்துக்கள் யாவரும் குரான் படியுங்கள்" என்றதிலிருந்தும், தானும் குரான் படித்துக் கொண்டு 'ராம்—ரஹீம்' (அல்லாஹ்) பஜனை செய்ததிலிருந்தும், மற்றவர்களையும் செய்யச் செய்ததிலிருந்தும், ஜாதிமத சம்பந்தமாக அவர் அடைந்த மாற்றத்திற்கு அளவு காட்டவேண்டுமா என்று கேட்கிறேன். தவிரவும், காந்தியார் விக்கிரக ஆராதனைக்கு மாத்திரம் குறை சொல்லாமல், கடவுள் என்பதை மனித உருவாக, வஸ்துவாக, ஒரு தனிப்பொருளாக, கற்பித்துக்கொண்டு இருக்கிறவர்களுக்கும் படும் படியாக "எனக்கு கடவுள் ஒரு வஸ்துவாக தனிப்பட்ட பண்டமாக இருக்கிறது என்பதில் நம்பிக்கை இல்லை." ("I have no belief in personal-God") என்று ஒன்றுக்கு மேற்பட்ட தடவை சொல்லிவிட்டார். அதாவது கடவுள் என்பதை நான் ஒரு செயலாக சக்தியாகக் கருதுகிறேனே ஒழிய, ஒரு மனிதன் செய்கைபோலவோ, ஒரு ஜீவன் செய்கை போலவோ கருதவில்லை என்பதுஆகச் சொல்லிவிட்டார். இதற்கு இயற்கை நடப்பு தான் கடவுள் என்பது பொருளாகும். இந்த எண்ணம் அளவாவது மக்களுக்குள் வருமேயானால் கோவில், விக்கிரகம், உண்டைகட்டி, படையல், அதுகளுக்கு கல்யாணம், உற்சவம் முதலியதான வழிகளில் பார்ப்பனர் பணம் பறிக்கும் தந்திரமும், சோம்பேறி வாழ்வும் அடியோடு நின்றுவிடும். அப்புறம் "மேல் உலகம்" "கீழ்உலகம்" பித்தலாட்டங்களும், அவற்றால் பார்ப்பனர்களுக்கு ஏற்படும் கொள்ளை வருவாய்களும் ஒழிந்துவிடும். சுருக்கமாகச் சொன்னால் பார்ப்பனியமே பட்டு அழிந்துவிடும். ஆகவே நமக்குமாத்திரம் அல்லாமல் 'இந்தியநாடு' முழுவதுமே சமய சமுதாய, துறையில் ஏற்பட இருந்த புரட்சிகரமான அநேக மாறுதல்கள் தான், காந்தியார் பார்ப்பனரால் கொலைசெய்யப்பட நேர்ந்தது. அப்படிப்பட்ட மாறுதலை விரும்பும் நாம் அதற்காக மிக மிகத் துக்கமும் துயரமும் அடைகிறோம்.

## திராவிடர் கழகம்.

அடுத்தாற்போல் நம் கழகத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தோழர்களே! நான் திராவிட கழகத்தை, அது ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயரோடு இருந்த காலத்தில் இருந்ததுபோல் இது ஒரு கட்சியல்லவென்றும், திராவிடர் கழகம் ஒரு பிரச்சார இயக்கம் என்றும் 10 ஆண்டுகளாகச் சொல்லி வருகிறேன். அதனாலேயே திராவிடர் கழகத்தை மக்கள் ஒரு கட்சி என்று கருதாமல் இயக்கம் என்றே கருதவேண்டும் என்பதற்கு ஆக, அதற்கு ஏற்றபடி கழகத்தை ஒரு பிரசாரஸ்தாபனமாகச் செய்து வருகிறேன். ஏன் என்றால் 1925-ல் நாம் ஆரம்பித்து நடத்தி வந்த சுயமரியாதை இயக்கம் தான் ஜஸ்டிஸ் கட்சியைக் கைப்பற்றி இப்பத்தாண்டுகளாக இயக்கப் பிரச்சாரம் செய்து வருகிறதே ஒழிய, இது ஒரு தனிக்கட்சியாளர் கையில் இல்லை. சுயமரியாதை இயக்கத்தின் திட்டங்களில் ஏதாவது ஒரு சிறு மாறுதல் காணப்பட்டால் காணப்படலாமே ஒழிய, சுயமரியாதை இயக்க அடிப்படையிலும் அதன் தலையாய கொள்கைகளிலும் திராவிடக் கழகத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. இதைச்சேலம் மகாநாட்டிலேயே அண்ணாத்துரை தீர்மானம் தெளிவு படுத்தி ஆகிவிட்டது. ஆகவே ஜஸ்டிஸ்கட்சி எந்த மக்களுக்கு ஆக, என்று தோற்றுவித்து நடத்தி வரப்பட்டதோ, அந்த மக்கள் (திராவிட மக்கள்) சுயமரியாதை இயக்கத்தை அப்படியே ஒப்புக்கொண்டு பெரிதும் சுயமரியாதைக் காரர்களாக ஆகிவிட்டார்கள் என்பதும், சுயமரியாதைக்காரர்கள் அல்லாதவர்களாய் இருந்தவர்கள் மெல்ல நழுவி விட்டார்கள் என்பதும் தான் கருத்தாகும். எனவே சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் என்னும் பேரால் பெரிதும் தன் இயக்கப் பிரச்சார வேலையே செய்து வருகிறது என்று சொல்லலாம். அதனால் தான் நான் அடிக்கடி திராவிடர் கழகம் ஒரு பிரச்சார இயக்கம் என்றும் இது காங்கரஸ், கம்யூனிஸ்ட், சோஷியலிஸ்ட், இந்து மகா சபை, வருணாச்சிரம சுயராஜ்ய சங்கம், பிராமண பாதுகாப்பு, மிதவாத சங்கம், முஸ்லிம் லீக், கிறிஸ்துவசங்கம், தாழ்த்தப்பட்டவர்கள் ஷெடியூல் லீக் முதலாகியவை போலும் மற்றும் பல ஜாதி வகுப்புச் சங்கங்கள் போலும் ஒரு கட்சி ஸ்தாபனமல்ல என்று சொல்லுகிறேன். எப்படிஎனில், இக்கழகம் மக்கள் அறிவுத் துறையிலும், சமுதாயத் துறையிலும், மதத்துறையிலும், கடவுள் துறையிலும் நீண்ட நாட்களாக இருந்துவரும் மடமைகளையும், முன்னேற்றத் தடைகளையும், குறைபாடுகளையும் நீக்கவும், மக்கள் யாவரையும் ஒன்று படுத்தி ஒரு சமுதாயமாக ஆக்கவும், சிறப்பாக நமக்குத் திராவிட மக்களுக்கு இருந்துவரும் சமுதாய இழிவு, மத மூடநம்பிக்கை, ஜாதிப்பிரிவு, வேறுபாடு அடியோடு அழிக்கப்பட்டு ஆரியக்கொடுமையிலிருந்து மீளவுமே பாடுபட்டு வரும்படியான அதாவது மக்களுக்கு வலியுறுத்தி வரும்படியான ஒரு ஸ்தாபனமாகும்.

திராவிடக்கழகத்திற்குச்சுயராஜ்யம் பெற வேண்டுமென்கிற ஒரு கற்பனைத் தத்துவமோ, தேர்தலுக்கு நின்று மெஜாரிட்டியாகி 'அரசியலை' கைப்பற்ற வேண்டும் என்கிற ஒரு தப்புப்பாவனையோ இல்லை. ஏனென்றால், இன்று நாட்டில் நடப்பது சுயராஜ்யம் என்று தான் சொல்லப்படுகிறது. அன்னியனான வெள்ளையன் (பிரிட்டிஷார்) ஆதிக்கம் போய்விட்டது. திராவிட நாட்டுக்குத் திராவிட மக்களே முதன் மந்திரி, இரண்டாம் மந்திரி, மொத்தத்தில் 13ல் 10 மந்திரி திராவிடர்கள் என்று சொல்லும்படியான திராவிட மெஜாரிட்டி மந்திரி சபையாக இருக்கும்போது, இனி சுயராஜ்யம் பெறுவது என்பதற்கு வேறு கருத்து என்ன இருக்க முடியும்? யார் பெறுவது? அரசியலைக் கைப்பற்றுவது என்பதில், யாரிடமிருந்து யார் கைப்பற்றுவது? திராவிட மக்கள் அல்லாதவர்கள் கைக்கு இனி அரசியல் எப்படிப் போகும்? ஆகவே சுயராஜ்ஜியம் பெறுவது என்பதோ, அரசியலைக் கைப்பற்றுவது என்பதோ இனி அர்த்தமற்ற பேச்சுகளாகும். அர்த்தமற்ற காரியங்களுமாகும்.

இந்த மாகாணத்தில் இனி நாம்தான் 100க்கு 90க்கு மேம்பட்ட ஓட்டர்களாகவும் ஆக்கப்படப் போகிறோம். பெரும்பாலான மந்திரிகள், உத்தியோகஸ்தர்கள், திராவிடர்களாகத் தான் இருக்கப் போகிறார்கள். அதில் சந்தேகம் இருக்க நியாயமில்லை. ஆனால் இதில் என்ன குறை சொல்லலாம் என்றால் இதனால் திராவிட நாடு பிரிந்து கிடைக்குமா? திராவிடக் கழக கொள்கைகள், திட்டங்கள் நடை முறைக்கு வருமா? என்பதுவே யாகும். சுலபத்தில் வராது என்று வைத்துக் கொள்ளலாம். ஆனால் நாம், திராவிடக்கழகத்தார் சட்ட சபைக்குப் போய் விடுவதாலோ, அரசியலைக் கைப்பற்றுவதாலோ, மந்திரிகளாய் விடுவதாலோ திராவிட நாடு வந்து விடுமோ திராவிடர் கழகக் கொள்கைகளும், திட்டங்களும் அரசியல் மூலம் நடத்தப்பட்டு விடுமோ? என்று பார்த்தால் இன்றைய நிலைமையில் அவை சுலபத்தில் ஆகக்கூடிய காரியங்கள் அல்ல என்பதே நமது கருத்து.

## சட்டசபைப் பிரவேசம்.

முதலாவது நம்மால் (திராவிடக் கழகத்தாரால்) மெஜாரிட்டியாய்ச்சட்ட

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

ரோஜா முத்தையா

# இழிவு நீங்கும் வரை போராடித் தீருவோம்.

## ஆரியம் போருக்கு அழைக்கிறது!

★

(தூத்துக்குடியில் 8, 9—5—48ல் நடைபெற்ற திராவிடர் கழக 18வது மாகாண மாநாட்டில் கொடியேற்றிய குடந்தை தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் நிகழ்த்திய கொடியேற்றுவிழா சொற்பொழிவு.)

மதிப்புக்குரிய திராவிடத்தந்தை பெரியார் அவர்களே! தோழர்களே! தாய்மார்களே! உங்களனைவருக்கும் என் வணக்கம் உரியதாகுக.

இன்று நடக்கின்ற திராவிடர்களின் 18வது மாநாடு வருங்கால சரித்திரத்தில் முக்கிய இடம் பெறக்கூடியது. இம்மாபெரும் மாநாட்டில் எனக்குக் கொடியேற்றி வைக்கும் பெரும் பணியை அளித்துப் பெருமை படுத்தியதானது நமது திராவிடத் தந்தை பெரியார் அவர்களுக்கே உரித்தானதாகும்.

இக்கொடியானது திராவிட இனத்தின் இழிவை நீக்குவதற்காக ஏற்பட்ட சின்னமாகும் என்பதைத் தாங்கள் எல்லோரும் அறிவீர்கள். அதன் தத்துவத்தைப் பற்றி விளக்கிக் கூறவேண்டிய அவசியம் இருக்காது என்று எண்ணுகிறேன். ஒவ்வொரு தேசத்தின் பாலுள்ள ஒரு கொள்கையைக் கொண்ட மக்களுக்கும் ஒவ்வொரு கொடி உண்டு. அந்தந்த நாட்டு மக்கள் தங்கள் சமுதாய இழிவும், அரசியல் அடிமைத்தனமும் போவதற்கு அந்தந்தக் கட்சிக்கொடியின் கிழ் நின்று போராடி விடுதலை பெற்றிருக்கின்றனர். அதுபோல் நாமும் திராவிடக் கழகத்தின் இக்கொடியின் கிழ் நின்று நம்முடைய சமுதாய இழிவு நீக்கமும், நாட்டுப் பிரிவினையும் பெறவேண்டிய நிலையிலிருக்கிறோம்.

சுமார் 2000 ஆண்டுகளாக நமது திராவிட சமுதாயமானது, இந்நாட்டிற்குள் ஒடிவந்து குடியேறிய பார்ப்பன சமூகத்தினரால் இழிவு கற்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரமாகவுள்ள இதிகாசங்கள், புராணங்கள், காவியங்கள் எல்லாம் நமது சமுதாயத்திலிருந்து நீக்கப்பட வேண்டும். இவ்வாறு நீக்குவதற்குப் பொறுப் பெடுத்துக் கொண்டு வேலை செய்வது நமது திராவிடக் கழகம் ஒன்றேயாகும். அதற்கு ஏற்பட்ட கொடிதான் கருப்பில் சிகப்புச் சின்னம் கொண்ட கொடியாகும். அக்கொடியின் கிழிருந்து நமது இழிவு நீங்கும் வரையில் போராடித் தீருவோம் என்று உறுதி மொழியளிக்கும் நாளே இன்னாளாகும். அக்கொடியை முதன்முதலாக நிர்ணயித்துக் கொடுத்த நம் பெரியார் இங்கு வீற்றிருக்கிறார்கள். திராவிட இன மக்களாகிய நாம் இந்தக் கொடியின் கிழ் நின்று நம்முடைய உரிமைகளை அடைவதற்கு எப்பொழுதும் உறுதி கொள்ள வேண்டும். இவ்வாறு உறுதி கொண்டால் நம்முடைய லட்சியத்தை நாம் அடைவதற்கு முடியும் என்பது திண்ணம். இதர மேல் நாடுகளில் அரசியலைக் கைப்பற்றிச் சட்டமூலமாகச் சீர்திருத்தங்களைச் செய்தார்களெனில், நமது பெரியார் அரசியல் மூலம் சட்டம் செய்யப்படாமலேயே இந்த நாட்டு மக்களுக்குச் செய்த பகுத்தறிவுத் தொண்டினால் பல சீர்திருத்தங்களில் வெற்றி பெற்று நடைபெற்று வருவதை அறிவீர்கள். ஒவ்வொரு தோழர்களும் இக்கொடியை தங்களின் உயிருக்குச் சமமாகக் கருத வேண்டும். எவ்விதக் கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும் நம்முடைய லட்சியத்தை அடையும் வரையில் இக்கொடியின் கிழ் நின்று போராடுவதென்ற உறுதி கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் நான் பெரியார் அவர்களின் தொண்டில், நம் தலைவர் அவர்களின் கட்டளைக்குக் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றுகிற தொண்டனாவேன். அதன்படியே தாங்களும் தலைவர் அவர்களின் கட்டளையைச் சிரமேற்கொண்டு பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக நான் ஒரு வார்த்தை சொல்ல ஆசைப் படுகிறேன். நம்மை இழிமக்களாகக் கருதுகிறவர்களையும், நம்முடைய சமுதாய இழிவுகளை நீக்கும் நம் தொண்டிற்குத் தடையாயிருப்பவர்களையும் நாம் வெறுக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். வெறுக்கக் கற்றுக் கொண்டால்தான் நாம் நம்முடைய முயற்சியில் வெற்றியடையமுடியும். ரஷ்யநாட்டின் முடிசூடா மன்னராகிய தோழர் ஸ்டாலின் அவர்கள் செஞ்சேனையை நிறுத்தி அவர்களுக்குச் சொன்னதாவது "ஏ செஞ்சேனையே! உங்களுடைய அரசியல் எதிரிகளை வெறுக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுதுதான் வெற்றியடைவீர்கள்" என்றுசொன்னார். அந்த நிமிஷத்திலிருந்து 48 மணி நேரத்தில் 200 மைல்களைக் கடந்து, சென்ற யுத்தத்தில் ரஷ்யர் வெற்றியடைந்தனர் என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அண்மையில் நடந்துள்ள சென்னைமாகாண முற்போக்குப் பார்ப்பனர் மாநாட்டில் ஆரியம் போருக்கு அழைப்பு விட்டிருக்கிறதென்பதை அறிவீர்கள். அதற்கேற்ற திட்டங்களை இம்மாநாட்டில் முடிவு செய்து நமது செந்நிறம் பொறிக்கப்பட்ட கருங்கொடியை தாழாது உயர்த்திப் பிடித்து இக்கொடியின்கீழ் நமது லட்சியம் வெற்றியடைவதற்குத் திராவிடர்களனைவர்களும் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

நீங்கள் எல்லோரும் என்னைவிட அறிவிலும், ஆற்றலிலும் சிறந்தவர்கள் என்பதை உணர்வேன். எனினும் இப்பெரும் பணியை எனக்களித்த வரவேற்புக்குழுவினர்க்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் பெரியாரவர்கள் மாநாட்டில் தலைமைவகித்து அறிவுரை நிகழ்த்தப் போகிறார்கள். இதற்கு முன்பாக நமது இழிவு நீக்குச் சின்னமாகிய நமது கழக வீரக்கொடியை உங்கள் மத்தியில் ஏற்றிவைக்கிறேன். வாழ்க திராவிடம்! வாழ்க பெரியார்!! திராவிடநாடு திராவிடருக்கே!!!

# 18-வது திராவிடர் கழக மாகாண மாநாடு.

## தூத்துக்குடி தொண்டர்களின் பெரு வெற்றி!

### இந்நாட்டு வரலாற்றிலேயே இணையற்ற காட்சி!

## ஒன்றரை லட்சத்திற்கு மேற்பட்ட கூட்டம்.

### அயல் நாட்டிலிருந்தெல்லாம் பிரதிநிதிகள்.

### 25000 தாய்மார்கள் ஏராளமானபேர் கருப்புடை.

★

[நமது நிருபர்]

**வருகை.**

மாநாட்டுப் பிரதிநிதிகளும், தாய்மார்களும், பார்வையாளர்களும் 6ம் தேதியிலிருந்தே பெரும்பெரும் கூட்டமாக வந்திறங்கினார்கள். தனி வண்டியோ, அதிகப் பெட்டியோ சேர்க்காமல் வழக்கம் போல் வந்த வண்டிகள், இறங்கிய கூட்டத்தைக் காணும் ஆற்றல் பெற்றிருந்தால், "நாம் எப்படித்தான் இவர்களைச் சுமந்து வந்தோம்" "இத்தனை பேர் எப்படித்தான் உட்கார்ந்து வந்தார்கள்" "நமக்கு இத்தனை பேரை வைத்து இழுத்துவரும் ஆற்றலும் இருக்கிறதா? (மணியாச்சி—தூத்துக்குடி லயனில் ஓடும் இன்ஜின்களுக்கு பவர் குறைவு என்பது அதிகாரிகளின் கணக்கு) என்று ஆச்சரியமும் திகைப்பும் மயக்கமும் அடைந்திருக்க வேண்டும் என்பது நிச்சயம். தென்னிந்திய ரயில்வே அதிகாரிகள் செய்து கொடுத்த உதவியினால், ஒவ்வொரு கக்கூஸ்களுக்குள்ளேயும் 7, 8 பேர் நின்று கொண்டிருந்தார்கள் என்றால், பெட்டிகளின் மேல் கூரையில் 2 வரிசை நெடுக உட்கார்ந்திருந்தார்கள் என்றால், ஒவ்வொரு கால் வைத்து ஏறும் படிகளிலும் படிகள் காணப்படாமல் கால்களே காணப்பட்டன என்றால் இந்த நிலையை எப்படிக் கூறுவது? சுருக்கமாக உண்மையைக் கூறவேண்டுமானால், எழுச்சிக்கும் ஆர்வத்திற்கும் இதோ எடுத்துக்காட்டு என்று கூறுவது போல இருந்தது இந்தக் காட்சி.

மணப்பாரை, மதுரை, விருதுநகர் முதலிய ஊர்களில் உள்ள கருஞ் சட்டைத்தோழர்கள், அந்தந்த ரயில்வே ஸ்டேசன்களில் நின்று கொண்டு நீர் கொடுத்தும், மோர் கொடுத்தும், தேவையானவர்களுக்குக் காபி பலகாரம் வாங்கி வந்து கொடுத்தும், வழிகாட்டியும் உதவி செய்ததைப்பற்றி, வந்திறங்கியவர்கள் தங்கள் கஷ்டங்களுக்கிடையேயும் மனமாரப்பாராட்டிப் பேசிக்கொண்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

**ஊர்வலம்.**

8ம் நாள் காலையில் 9½ மணியளவில் ஹார்வி மில்லிலிருந்து ஊர்வலம், 18 அதிர் வெடியோடு புறப்பட்டது. முன்னால் 18 சைக்கிள்களில் கருஞ்சட்டைத் தோழர்கள் செல்ல, அதன்பின் 18 குதிரைகளில் தோழர் ராதா அவர்களை முன்னணியில் கொண்டு 17 தோழர்கள் பின்னணியில் சென்றனர்.

இவர்களுக்குப் பின்னாலும் வழியின் இருபுறத்திலும் பல பதினாயிரக்கணக்கான தொண்டர்களும், தாய்மார்களும் "பெரியார்வாழ்க" "திராவிடநாடு திராவிடருக்கே" என்பது போன்ற வாழ்த்தொலியை முழக்கமில்லாத தூத்துக்குடிக் கடற்கரையில், கடல் முழக்கம்போல் முழக்கிச் செல்ல, பேண்டு வாத்தியம்உடன் முழங்க, வழி நெடுகக் கட்டப்பட்டிருந்த அலங்கார வளைவுகளைத் தாண்டி பெரியார் அவர்களும் மற்ற பேச்சாளர்களும் மூன்று கார்களில் மாநாட்டுப் பந்தலுக்கு 11மணியளவில் அழைத்து வரப்பட்டனர்.

பார்ப்பனர்களின் பதறலாலும் காங்கரஸ் தோழர்களின் கதறலாலும் பல நூற்றுக்கணக்கான போலீஸ்காரர்களும், இராணுவத்தினரும் அனுப்பப்பட்டு, அவர்கள் தெருத் தெருவாய் ரோந்து சுற்ற, அக்கிரகாரத்துக்குள் கருப்புச்சட்டையே நுழையக்கூடாது என்று ஒரு பார்ப்பன இன்ஸ்பெக்டர் பல கான்ஸ்டபிள்களோடு பாதுகாத்து நின்று பயமுறுத்த,எவ்வித அமைதிக் குறைவுமில்லாமல் தொண்டர்களின் கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் கண்டு போலீஸ் வீரர்களும் மெய் சிலிர்க்க, ஊர்வலம்வெற்றியாக நடந்ததை இங்கு குறிப்பிடவேண்டும்.

**பந்தல்**

8250 சதுரகஜம் கொண்டதாய், பிரம்மாண்டமான அளவில் போடப்பட்டிருந்த அர்ச்சுனன் பந்தலின் தலைவாசலைப் பெரியாரின் நெடு உருவம் நின்று அழகு படுத்தியது. பந்தலுக்கு எதிரில் ஓங்கி வளர்ந்த கொடிமரம். அதற்கு எதிரில் 20க்கு மேற்பட்ட ஸ்டால்கள். பந்தலுக்குள் 82500-பேர் அமர முனிசிப்பாலிட்டியார் லைசென்சு கொடுத்திருந்தாலும், ஒன்றரை லட்சத்திற்கதிகமான ஆண்களும் பெண்களும் குழுமியிருந்தார்கள். பந்தலின் அளவில் 6ல் ஒரு பங்குக்கதிகமாகப் பெண்கள் திரண்டிருந்தார்கள் என்றால், பெண்கள் எத்தனை ஆயிரம் பேர் இருக்கலாம் என்பதை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளலாம். இரண்டுதூண்களுக்கிடையிடையே ஒவ்வொரு தண்ணீர்ப் பானையும், அதை நிரப்பிக்கொண்டேயிருந்த தொண்டர்களும், குழந்தைகளுக்கான தொட்டில்களும், அவற்றை ஆட்டும் பெண் தொண்டர்களும், ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டுக்கொண்டு தொண்டு செய்தது, எவர்மனதையும் கொள்ளைகொள்ளும்.

11 மணியளவில் தலைவர் பெரியாரவர்கள் உள் நுழைந்ததும் ஒரே ஆரவாரம்! முழக்கம்! வாழ்த்தொலி!

பெரியாரவர்கள் ஆசனத்தில் அமர்ந்ததும் பல நிறமின் விளக்குகள் கொண்ட சக்கரம் இடைவிடாது சுழன்று கொண்டிருக்க, செயலாளர் கேட்டுக் கொள்ள தோழர் கே. கே. நீலமேகம் அவர்

கள் கொடியேற்றுவிழாச் சொற்பொழிவை நிகழ்த்தி (சொற்பொழிவு வேறு பக்கம்) வாழ்த்தொலிகளுக்கிடையே கொடியேற்றிவைத்தார்கள்.

இரண்டாவதாக கழகத் தலைவர் வேதாசலமவர்கள் மாநாட்டைத் திறந்து வைக்கும் முறையில் ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். (அதை மற்றொரு புறம் காண்க)

வரவேற்புக் கழகத் தலைவர்களான தோழர் நீதிமாணிக்கம் அவர்களும் தோழர் வள்ளிமுத்து அவர்களும் யாவரையும் வரவேற்றுப் பேசினார்கள். தோழர் நீதிமாணிக்கம் அவர்கள் பேசியதின் சுருக்கம்:—

திராவிட நாட்டின் தனிப்பெருந் தலைவர் பெரியார் அவர்களே! பெரியோர்களே! தோழர்களே! தாய்மார்களே! உங்கள் அனைவருக்கும் எங்கள் வணக்கம்.

இம்மாகாண மாநாட்டை இங்கு கூட்டி நடத்துவதற்காக நாங்கள் பெரும் முயற்சி எடுத்து இங்கு நடத்துகிறோம் என்றாலும், இம் மாகாணத்தின் பல பாகங்களிலிருந்து வந்திருக்கும் பெரியோர்களும், தாய்மார்களும், தங்குவதற்கு வேண்டிய வசதிகள் செய்திருந்தாலும், பல ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்கும் இந்நேரத்தில் பல வசதிக் குறைவுகள் இருக்கும் என்று நம்புகிறோம். அக் குறைகள் இருப்பின், அக்குறைகள் நமது குடும்பத்தில் ஏற்பட்ட குறைகள் என்ற முறையில் எல்லோரும் மன்னிப்பீர்கள் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இம்மாநாடு திராவிடத்தின் தந்தை தனிப்பெருந்தலைவர்பெரியார் அவர்களின் தலைமையில் நடக்கப் போவதை அறிவீர்கள். இம் மாநாட்டிற்கு வந்திருக்கும் தோழர்கள் இக்காலம் இருள் சூழ்ந்த காலமென்பதையும், அதில் நிலவு என்ற சந்திரன் பிரகாசிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிற நிலையில் இருக்கிறோம் என்பதையும் அறிவீர்கள். நமது சமுதாய இழிவுகள் நீங்கவும், அரசியலில் விடுதலை பெறவும், நாட்டுப்பிரிவினையில் வெற்றி காணவும் அதற்கான தீர்மானங்களை இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டு நடைமுறையில் செயலாற்றும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மறுமுறையும் இம்மாநாட்டிற்கு வந்திருக்கும் பிரதிநிதிகளையும், மற்றவர்களையும் வரவேற்று, வணக்கம்கூறி வரவேற்கிறோம். வாழ்க பெரியார்! வாழ்க திராவிடம்! வணக்கம்.

இத்துடன் முற்பகல் நிகழ்ச்சி முடிந்தது.

### பிற்பகல்.

மாலை 4-மணியளவில் மாநாடு மீண்டும் கூடியது. சம்பிரதாயத்தை யொட்டி மாநாட்டிற்குத் தலைவரை முன்மொழிந்தும், வழிமொழிந்தும் தோழர்களான குடந்தை வி. சின்னத்தம்பி, திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம், சென்னை கே. கோவிந்தசாமி, விருதுநகர் ஆ. வ. ப. ஆசைத்தம்பி, வேலூர் திருநாவுக்கரசு, சேலம் ஜகதீசன், விருத்தாசலம் முனிசாமி, திருவொற்றியூர் சண்முகம், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, கே. வி. அழகிரிசாமி, திண்டுக்கல் மத்திரன், பொன்னுசாமி, மூவலூர் இராமாமிர்தத்தம்மாள், எம். ஆர். ராதா ஆகியோர் பேசினார்கள்.

அதன்பின் தலைவர் பெரியாரவர்கள் தம் தலைமைப் பேருரையை நிகழ்த்தினார்கள். (அதை வேறு பக்கத்தில் காண்க) பேருரை முடிந்த 7½மணி வரையிலும் எங்கும் ஒரே நிசப்தம். அத்தனை பேரும் கட்டுண்டு கிடந்தவர்கள் போல் காணப்பட்டார்கள். இன்று இத்துடன் மாநாடு முடிந்தது.

## 9—5—48.

இன்று காலை மீண்டும் 9½மணியளவில் மாநாடுகூடியது. தாளமுத்து-நடராசன் படத்தைத் தோழர் ஏ. பி. சனார்த்தனம், எம். ஏ. அவர்களும், வ. உ. சி. படத்தை விடுதலை ஆசிரியர், தோழர் குருசாமி பி. ஏ. அவர்களும், அன்னை நாகம்மையார் படத்தைத் தோழியர் குஞ்சிதம் பி. ஏ., எல். டி. அவர்களும், பன்னீர்ச்செல்வம் படத்தைத் தோழர், கே. வி. அழகிரிசாமியவர்களும், திராவிட நாட்டுப் படத்தைத் தோழர், ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களும், காந்தியார் படத்தைத்தலைவர் பெரியார் அவர்களும் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினார்கள்.

அதன்பின் சிறுமிகளான மனோரஞ்சிதம், பாரிசாதம் ஆகியோரும் தோழர்களான, சி. பி. சின்னராசு, கருணாநிதி, இளஞ்செழியன், வீரராசு, என். வி. நடராசன் ஆகியவர்களும் பேசினார்கள்.

சில தீர்மானங்கள் கழகக்கட்டுப்பாடு குறித்து, நிறைவேறிய பின் பகல் 1-மணியளவில் முற்பகல் நிகழ்ச்சி முடிந்தது.

### பிற்பகல்.

பகல் 4-மணியளவில் மீண்டும் கூடி34 தீர்மானங்கள்நிறைவேற்றப் பட்டன. காலையிலும், மாலையிலுமாகக் கரூர் நிதி வசூலுக்காக கைக்குட்டையிலும், முந்தானையிலும் வசூலான ரூ. 890- தலைவர் பெரியாரவர்களிடம் சேர்ப்பிக்கப்பட்டுச் செயலாளர், தோழர் கே. வி. கே. சாமியவர்கள் அனைவருக்கும் நன்றிகூறி 6-அடி நீளமுள்ள பெரியதொரு மாலையைத் தலைவருக்கு அணிந்ததோடு இரவு 7½-மணியளவில் மாநாடு பெருவெற்றியுடன் நிறைவேறியது.

### நாடகம்.

தோழர், எம். ஆர். ராதா அவர்களின், "சர்வாதிகாரி" நாடகம் இரவு 10-மணியளவில் தொடங்கியது. கம்பேனித் தோழர்களோடு கே. வி. அழகிரிசாமியவர்களும், நாகை காளியப்பன் அவர்களும் நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்டனர். ஏராளமான ஆண்களும், பெண்களும் கண்டு ரசித்தனர்.

### தொண்டர்கள் உழைப்பு.

தூத்துக்குடித் தொண்டர்களைப்போல, "கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் கடைப்பிடித்த தொண்டர்கள் நம்மூரில் இல்லையே! நாம் நம்மூரில் இவ்வாறு நடந்துகொள்ள முடியுமா?" என்றுதான் ஒவ்வொருவெளியூர்ப் பிரதிநிதிகளும் பொறாமையோடு பெருமூச்சு விட்டார்கள் என்று கூறினால் அது மிகையாகாது. ரயிலடியில் வரவேற்று, பிரதிநிதிகளை அவரவர்கள் ஜாகைக்கு அழைத்துச் சென்று வழிகாட்டியதையும், ஊர்வலத்தில் கட்டுப்பாடாக ஒழுங்கு முறை தவறாமல் இயந்திரத்தைப் போல் நடந்து கொண்ட பயிற்சியின் உயர்வையும், மாநாட்டுப் பந்தலுக்குள் பெருங் கூட்டத்தைச் சமாளித்து அமைதியைக் காத்த அவர்களின் பேருழைப்பையும் உண்மையிலேயே மதிப்பிட்டுச் சொல்ல முடியாது. மாநாட்டின் சிறப்புக்கு முக்கிய காரணங்களில் ஒன்று தொண்டர்களின் பேருழைப்பு.

### உணவு.

ரயில்வே அதிகாரிகளோடு நம் கம்யூனிஸ்ட் வீரர்களும் சேர்ந்து

# எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் வேண்டும்.

## இதை விரும்புவது தானே திராவிடர் கழகம்?

### உணவுப் பொருள்களை அழிப்பதா? உண்மையான கடவுள் வணக்கம்.

★

18-வது திராவிடர் கழக மாநாட்டைத் திறந்து வைக்கும் முறையில், கழகத் தலைவர் தி. பொ. வேதாசலம் அவர்கள் பேசியதின் சுருக்கம்.

பெரியார் அவர்களே! திராவிட மாநாட்டுப் பிரதிநிதிகளே! தோழர்களே! தாய்மார்களே!

இம் மாநாட்டைத் திறந்துவைக்கும் பெரும் பணியை வரவேற்புக் கழகத்தினர் எனக்குக் கொடுத்ததுபற்றி நான் பெரிதும் அவர்கட்கு கடமைப்பட்டுள்ளேன். பெரியார் அவர்களின் நீண்டநாள் தொண்டர்களில் நானும் ஒருவனென்ற ஒரு காரணம் தவிர வேறு தகுதியோ, திறமையோ என்பாலிருப்பதாக நான் கருதவில்லை.

நாம் கூடியிருக்கும் காலம் உலகச் சரித்திரத்திலே மிக முக்கியமானதாகும். இரண்டாம் உலகப்போர் முடிந்து மூன்றாம் உலகப்போர் மூளுவது பற்றி உலகம் கவலையும், திகிலும் கொண்டுள்ள காலம். பழைய கருத்துக்களும் தொன்றுதொட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட நம்பிக்கைகளும் கைவிடப்பட்டு அரசன் ஆளுகை (Monarchy) முற்றிலும் நீங்கி நாட்டில் சிலர்ஆளும் வகை (Aristocracy) கைவிடப்பட்டு எல்லோரும் சேர்ந்து தங்கள் தங்கள் நாட்டை ஆளும் (Democracy) செயல் உலகமெல்லாம் நடக்கும் காலம். பொருள் நிலையில் பொதுவுடைமை ஒரு நினைவாகயிருந்தது போய் செயலாக மாறி அய்ரோப்பாவின் பெரும்பாகம் தனதாகி ருஷ்யா அதைஆதரிக்கவும் தனிவுடைமை அரசாகிய Anglo-American நாடுகள் எதிர்த்துப் போராட முற்படும் காலம். மதம் தன் செல்வாக்கெல்லாம் மாறி ஆட்சியில் தான்கொண்ட வலிவும் நீங்கி தனக்கிருந்த செல்வாக்கும் போய் உலகமெல்லாம் (Secular States) மதம் நீங்கிய அரசியல் நிலவுகின்ற காலம். ஒவ்வொரு நாட்டினரும் சுதந்தரமாய் தாங்களே சுயநிர்ணயமாய் நாடாளுகின்ற காலம். சென்ற ஓர் ஆண்டில் கீழ்த்தேசங்களான இந்தியா, பர்மா, இலங்கை இவையெல்லாம் சுதந்தரம்பெற்ற காலம். இந்தோனிஷியா சுதந்தரத்திற்காகப் போராடுகின்ற காலம். சுதந்தரம், சுயநிர்ணயம், மதமற்ற அரசியல், சமமான பொருள் நிலை இவைகளே மக்கள் உலகமெங்கும் விரும்புவதும், வேண்டுவதுமான காலம்.

#### இந்தியா.

இக்காலத்தே இரண்டாகி பாக்கிஸ்தான் ஓர் நாடாகவும் நம் இந்தியன் டொமினியன் மற்ற பிரிவாகவும் சென்ற சிலமாதங்களில்ஆயது.ஆங்கில ஆட்சிநீங்கிவிட்டது. சுதேச மன்னர்களில் பெரும்பாலோர் இந்தியன் டொமினியனுடன் ஒன்றுபட்டுவிட்டனர். தென்னிந்தியாவில், ஹைதராபாத், மைசூர், திருவாங்கூர், கொச்சின், இந்த சமஸ்தானங்களில் ஹைதராபாத் நீங்கலாக மற்றவை ஒத்துவாழச் சம்மதப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் ஆட்சி ஏற்பட்டுவிட்டது. ஹைதராபாத் சமஸ்தானம் மட்டும் தனியாக நின்று வருகின்றது.

#### நாட்டின் நிலையும் அரசியல் கட்சிகளும்.

சுதந்தரம் ஏற்பட்ட நாள் முதல் வடஇந்தியாவில் அமைதி குலைந்து லட்சக்கணக்கான முஸ்லிம்களும், இந்துக்களும் ஒருவரையொருவர் கொன்று பல கோடிப் பொருட்களையும், வீடுகளையும் நாசமாக்கி பெண்களை ஆயிரக்கணக்கில் கடத்திச் சென்று பஞ்சமும், பிணியும், துன்பமும் நாட்டில் நிலவ சாந்த மூர்த்தியாம் காந்தி யடிகளையும் இரக்கமில்லாத ஒருவன் கொல்லவும், நாடு சின்னாபின்னமாகச் சீர்குலைந்து நிற்க தென்னாடாகிய திராவிடநாடு மட்டும் அமைதியுடன் வாழ்ந்து வருவது குறிப்பிடத் தக்கதாகும். முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் பேதங்கள் அதிகம், வேலை நிறுத்தங்கள் நித்தியக் காட்சி, ஒவ்வொரு ஜாதியினரும், இனத்தவரும், மாகாணத்தவரும் தங்கள் தங்கள் உரிமைகளைப் பற்றியும், எதிர்காலம் பற்றியும் கவலை கொள்வது. இவையே நாட்டின் நிலை.

அடுத்து அரசியல் கட்சிகளில் நாட்டிலிருந்து சில மாதங்களில் மறைந்தவை.

1. முஸ்லிம் லீக்.
2. இந்து மகாசபை.
3. இந்தியக் கிருஸ்தவர் சங்கம்.
4. தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன்.

இருப்பவை:—

1. நாட்டு மக்களால் பெரிதும் நம்பிக்கை இழக்கப்பட்டு வருவதும், இனிமேல் இக்கட்சியால் செயலாற்ற முடியாதென்று கருதப்படுவதும், முதலாளிகளாலும், பெருநிலக்காரர்கள், இன்ஷியூரன்ஸ் கம்பெனியார், பெரிய வியாபாரிகள், தர்ம சொத்தால் பெருமையோடு வாழ்பவர், கடவுள் பெயரைச் சொல்லிப் பிழைப்பவர், மேற்சொன்னவர்களை அண்டிப் பிழைப்பவர், ஆகிய இவர்களாலேயே பெரிதும் காப்பாற்றப்பட்டு வருவதும் நாட்டிற்கு மிகமுக்கியமானபொருள்நிலைவகுக்கக் கொள்கையில்லாததும், மக்கள் எல்லோரும் சீக்கிரம் படித்தாக வேண்டுமென்ற கவலையில்லாததும் மக்கள் வேலையில்லாத நிலை, தரித்திர நிலை, இவைகளையும் கவனியாததுமான காங்கரஸ் அரசாங்கம் நடத்துவதைப்பார்க்கின்றோம்.

அடுத்து காங்கரஸ்காரர்களால் ஏவிவிடப்பட்டவர்களும், அவர்களுக்காக மக்களிடம் பரிந்து பேசமுன் வந்திருக்கும் கொள்கையில்லாத முடிவில்லாத சோஷியலிஸ்ட் என்ற சமதர்மிகள்.

அடுத்து அடக்கு முறையால் அட்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

---

கொண்டு கொடுத்த தொந்தரவினால், மாநாட்டுப் பிரதிநிதிகளும், மற்றவர்களும் 2 நாட்களுக்கு 3 நாள் தங்கவேண்டிய பெருநெருக்கடியையும், பெரிய வெற்றியுடன் சமாளித்தது தூத்துக்குடி மாநாட்டினரின் உணவுஏற்பாடு. சமையலின் நேர்த்தியையும், உணவு பரிமாறுவதின் ஒட்டத்தையும் உண்டு, கண்டு களிக்கவேண்டுமேஒழியச் சொல்லி உணர வைக்க முடியாது. இந்தமாநாடு சோழ நாட்டில் நடந்திருந்தால்கூட அங்கு இப்படிப்பட்ட உணவு ஏற்பாடு இருக்க முடியாதென உறுதியாய்க் கூறலாம்.

#### திரும்புதல்.

ரயில்வே ஸ்டிரைக்கினால் 10 தேதி திரும்ப வேண்டிய தோழர்களெல்லாம் 11 தேதிதான் திரும்ப வேண்டியதாயிற்று. வரும்போது பட்ட தொல்லைக்கும், தொந்தரவுக்கும் குறைவில்லாமல்தான் திரும்பும் பொழுதும் தோழர்கள் அடைய வேண்டியதாயிற்று. பெரியாரவர்கள் ஸ்டேஷனுக்கு வந்திருந்து, எல்லாத் தோழர்களையும் அனுப்பிய பிறகே நான் ரூமுக்குப் போவேன் என்று சொல்லி, உடல் நலக் குறைவைச் சிறிதும் கருதாமல் உற்சாகத்தோடு வழியனுப்பிய காட்சி எல்லோருடைய மனதிலும் இயல்பாகப் பதிந்திருக்க வேண்டிய தொன்றாம்.

இத்தகைய மாநாடு திராவிட நாட்டு வரலாற்றிலேயே சிறந்த இடம் பெறத்தகுந்தது.

குடி அரசு

15—5—48 சனிக்கிழமை.

# திராவிடர் புரட்சித் திருநாள்.

★

சென்ற வாரம் சனி, ஞாயிற்றுக்கிழமை (8,9ம் தேதி)களில் 18வது திராவிடர் கழக மாநாடு, தூத்துக்குடியில் பெருத்த சிறப்போடு எல்லாவகையிலும் வெற்றியாக நடந்து முடிந்திருக்கிறது. இந்த நாட்கள் திராவிடர்கள் வரலாற்றிலேயே குறிப்பிடக் கூடிய முக்கியத்துவமும், சிறப்பும் பெற்ற நாட்கள் என்று சொல்லலாம். இன்னும் சொல்லப் போனால் இந்த நாட்கள், திராவிடர் திருநாள் அதுவும் திராவிடர் புரட்சி திருநாள் என்று தான் சொல்ல வேண்டும்.

ஏன்? தூத்துக்குடி வியாபார முறையில் பழம் பெருமையும், இக்காலத்தில் சிலருக்குப் பணவருவாயைக் கொடுக்கக் கூடிய தன்மையும் வாய்ந்ததாக இருக்கின்றதென்றாலும், திராவிட மக்களின் கவனத்தையும், முயற்சியையும் தன்னிடம் இழுத்துக் கொள்ளும் எந்தவிதமான கோயில் பெருமையோ, தீர்த்த விசேடமோ, ஸ்தல மகாத்மியோ, புராணக் கீர்த்தியோ யுடையதல்ல. அப்படியிருந்தும் கோயில்களுக்கே கூட்டம் கூட்டமாகக், குடும்பம் குடும்பமாக வரும் வழக்கத்தையும், தீர்த்தத் துறைகளுக்கே திரண்டு வரும் பழக்கத்தையும் கைக்கொண்டு, ஸ்தலமகாத்மியத்தில் சித்தத்தைச் செலுத்திப் புராணக் கீர்த்திகளைக் கேட்டுப் புளகாங்கிதம் கொள்ளும் பரம்பரையினரான அதாவது புண்ணியத்தில், மோட்சத்தில் பெரும் நம்பிக்கை வைத்த திராவிட மக்கள், திராவிடத்தின் பல பகுதிகளிலிருந்தும், இலங்கை, மலேயா போன்ற பிறநாடுகளிலிருந்தும், ஒன்றரை லட்சத்திற்கு அதிகமென்று சொல்லத்தக்க முறையில் அதில் 25000க்கு மேற்பட்ட தாய்மார்கள் என்று சொல்லும் வகையில் தூத்துக்குடியில் அன்று நிரம்பியிருந்தார்கள்.

இந்தத் தூத்துக்குடி யாத்திரைக்காக என்று, பலநாள் சில்லரையாகச் சேர்த்து வைத்த சேமிப்பை எடுத்துக் கொண்டும், சில்லரையாகச் சேர்த்துக் கொடுத்துவிடுவோம் என்ற நம்பிக்கையால் கடன் வாங்கிக் கொண்டும் வந்து சேர்ந்த பல பாட்டாளித் தோழர்களை நாமறிவோம்.

தமிழ் நாட்டின் ஒரு கோடியில் இருக்கும், இந்தத் தூத்துக்குடியை வந்துசேர அடையும் பொருள் கஷ்டம் ஒருபுறமிருக்க, நீதி அபிமானமற்ற ரயில்வே அதிகாரிகளும், மனிதாபிமான மற்ற கம்யூனிஸ்ட் வீரர்களும் வேண்டுமென்றே கொடுத்த தொல்லைகளை, தொந்திரவுகளை, புடுங்கல்களைப்பொருட்படுத்தாமல், புகை வண்டிகளில் தொத்திக்கொண்டு, கக்கூஸ்களுக்குள் அடைபட்டுக் கொண்டு, எப்படியும் மாநாட்டிற்கு முன்னாலேயே போய்ச் சேர்ந்துவிட வேண்டுமென்ற ஒரே துணிவுடையவர்களாய், உணவையும், நீரையும் கூட மறந்தவர்களாய், இத்தனை கஷ்டநஷ்டங்களிலும் புன்முறுவல் முகத்தில் தவழ உற்சாகமிக்கவர்களாகவும், ஏதோ பெரும் புதையலை எடுத்த நித்திய தரித்திரர்களைப் போலவும் திராவிடத் தோழர்கள் அங்கு காணப்பட்டனர்.

திருப்பதி வெங்கடாஜலபதிக்கோ, திருவண்ணாமலை அண்ணாமலையாருக்கோ, ஸ்ரீ ரங்கம் ரங்கநாதருக்கோ, சிதம்பரம் நடராஜருக்கோ, மதுரை மீனாட்சியம்மைக்கோ, மாயவரம் கடைமுழுக்குக்கோ கூடாத அளவு வெங்கடாஜலபதி வகையராக்கள், அதாவது அவைகளை ஆட்டி வைக்கும் அர்ச்சகப்பார்ப்பனர்கள் வெட்கித் தலைகுனியுமாறு கூடினார்கள்; கூடி, சாதி பேதமற்ற முறையில் சகோதர உணர்ச்சியோடு பழகினார்கள்; சமத்துவகீதத்தைத் தரணிக்கெடுத்து முழக்கினார்கள்; முழக்கத்தினால் ஒருமை எண்ணம் நிரம்பப் பெற்று ஒப்பற்ற இன்ப உணர்வை அநுபவித்தார்கள் என்றால், இந்த நாட்களைத் திராவிடர் திருநாட்கள் என்று சொல்லுவதில் தவறென்ன?

மனுநீதி அறமான நாளிலிருந்து, பழமைக்கு மண்டியிட்டுப் பார்ப்பனன் காலில் விழுந்து, அவன் எழுதியபடி என்றென்றைக்கும் இழிசாதியினராகி, சொன்னபடி பண்டிகைகளைக் கொண்டாடி, கேட்டபடி பணத்தைக் கொடுத்து, பிறப்பில் பேதம் வாழ்வில் நாசம் என்கிற முடிவையடைகின்றவர்களாய், அறிவையும், பொருளையும், மானத்தையும், இழப்பதையே பலனாக உடையவர்களாயிருந்த திராவிடப் பெருங்குடி மக்கள், மநுநீதி அறமான, வர்ணாச்சிரமத்திற்கு இடமான அந்த ஒருநாளை மாற்றியமைக்கும் நாளே திருநாள் என்று துணிந்து மாற்றும் வழி துறை காணும் முயற்சியில், அதாவது இழிவை நீக்கிக்கொள்ள வேண்டும் என்ற அக்கரையில் கூடிய இந்த நாட்களை ஏன் புரட்சித் திருநாட்கள் என்று சொல்லக்கூடாது?

காலச் செலவும், பொருட் செலவும் ஆகி இழிவையும் பழியையுமே தரவல்ல, வாழ்வுக்குக் கேடுபயக்கும் பல அர்த்தமற்ற திருநாட்களைப் போலில்லாமல், இழிவையும் பழியையும் துடைக்கவல்ல, வாழ்வுக்கு உறுதி கொடுக்கும் பல அறிவுரைகளைக் கேட்டு அவ்வழியே நிற்பதெனத் துணிந்து பல தீர்மானங்களை ஒரு மனதுடன் நிறைவேற்றிய இந்த நாள், திராவிடப் பெருங்குடி மக்களின் சீர்கெட்ட வாழ்வைப்போக்க வழி வகுத்த புரட்சித் திருநாளேயாகும்.

இந்தத் திருநாளில், தலைவர் பெரியார் அவர்கள் திராவிட மக்களுக்கு வழங்கிய, அநுபவமுதிர்ச்சியில் விளைந்த அறிவுக்கதிர்களையும் நிறைவேற்றிய தீர்மானங்களையும் நாம் வெவ்வேறு பக்கங்களில் தந்திருக்கின்றோம். அவைகளைத் திராவிடமக்கள் கருத்தூன்றிப் படிக்க வேண்டும்.

தலைமைப் பேருரையில் குறிப்பிட்டிருக்கும் பல அம்சங்களைப் பற்றியும் நாம் விளக்க வேண்டுமென்று எண்ணினாலும், இப்போது ஒரே ஒரு கருத்தைமட்டும் இங்கு விளக்குவதற்கு ஆசைப்படுகிறோம்.

திராவிடக் கழகத்தார் அரசியலில் பதவியோ, பட்டமோ பெறக்கூடாதென்று சேலம் மாநாட்டில்

ஸ்ரீராஜா முத்தையா

தீர்மானித்ததிலிருந்தே தலைவர் பெரியாரவர்கள் திராவிடர் கழகத்தை ஒரு அரசியல் கட்சியல்லவென்றும், ஒரு Movement இயக்கம் என்றும் பேசிவந்திருப்பதையும், அதையொட்டிக் கழக வளர்ச்சியில் பற்றும், நாணயமுமுடைய பிரச்சாரகர்கள் அந்தப்படியே விளக்கிப் பேசிவந்திருப்பதையும் திராவிடர்கள் நன்கு உணர்வர். திராவிடர்கழகம் இப்போதைக்கும் இன்னும் சில நாட்களுக்கும் ஒரு பிரச்சார இயக்கமாகத்தான் இயங்குமென்றும், அவ்வாறு இயங்குவதுதான் நமக்கு நன்மையைக் கொடுக்குமென்றும் திட்டவட்டமாகப் பெரியார் அவர்கள் விளக்கியிருப்பதைத்தான் நாம் இங்கு குறிப்பிட எண்ணுகிறோம்.

பெரும் பான்மையான திராவிட மந்திரிகளைக் கொண்டதுதான் இப்போதைய மந்திரிசபை. இந்த நிலையில் திராவிடர்கள் அரசியலைக் கைப்பற்றுவது என்றால் அதன் அர்த்தம் என்ன? இப்போதைய மந்திரிகள் பார்ப்பனீயத்தின் பாதுகாவலர்களாய், ஏவலாட்களாய் இயங்குகிறார்கள் எனவும், திராவிட சமுதாயத்திற்கு இவர்களால் பெரும் நன்மை விளைந்துவிடுவதற்கு ஏதுவில்லையென்றும், திராவிட நாட்டுப் பிரிவினைக்கு முட்டுக்கட்டையாக, தடைக்கல்லாக இருக்கின்றார்கள் எனவும் பல மாதிரியாகக் குறை கூறப்படுவது அவ்வளவும் நூற்றுக்கு நூறு உண்மையே யானாலும், இப்போதைய அரசியல் அமைப்பிலும், நல்லதையுணரும் பக்குவமோ, அதற்கான கல்வியறிவோ பெற்றில்லாத பெரும் பான்மையான திராவிடர்கள் நிரம்பியிருக்கும் நிலையிலும், சுயநலமே கருத்தாக வந்த வந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தன்னினத்தைக் காட்டிக் கொடுத்துத்தான் வாழ வேண்டுமென்றெண்ணும் தகுதிமிக்க பெருஞ்செல்வர், பேரறிவாளர் பெருக்கம் குறையாத நிலையிலும், நாம் அரசியலைக் கைப்பற்ற எண்ணுவது எவ்வளவு பெரும் ஆபத்து என்பதையும், கைப்பற்றாமல் நின்று, இருக்கும் நிலைமையை மக்களுக்கு எடுத்து விளக்கிவருவதால் ஏற்படும் நன்மையையும், அதனுடைய முடிவே அரசியல் நம் காலடியில் தஞ்சமடைய வேண்டிய நிலைமையையும், ஊகித்து உணரும் உணர்வுடையவர்களுக்கே உள்ளபடி தெரியவரும் எனலாம்.

மேலும் இப்போது அரசியலைக் கைப்பற்ற நாம் எண்ணுகிறோமென்றால் உண்மையிலேயே யாரிடமிருந்து கைப்பற்ற எண்ணுகிறோம்? ஓமந்தூராரிடமிருந்து அல்லவே அல்ல. ஓமந்தூராரை ஏவல் கொள்ளும் பார்ப்பனர்களிடமிருந்துதான் நாம் கைப்பற்ற எண்ணுகிறோம். 100-க்கு 3 பேரான பார்ப்பனர்களிடமிருந்து 97 பேரான திராவிடப் பெருங்குடி மக்கள் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்றால் திராவிடர்களின் அறிவுச் சூனியத்தையும், மானமற்ற தன்மையையும்தான் அது காட்டும். இப்படி நாம் கூறுவதைக் கேட்டு எவரும் வருத்தமோ கோபமோ கொள்வதில் பயனில்லை. உண்மையான நிலை இதுதான்.

நாம் முற்போக்கடைய வேண்டும் என்றெண்ணும் பலதுறைகளில், முக்கியமாகச் சமுதாய இழிவு நீக்குந் துறையை எடுத்துக் கொள்ளும் போது, அரசியல் துறை என்பது அதாவது அரசியலில் நாம் முற்போக்கடைய வேண்டுமென்று விரும்புவது ஒரு சிறு வேலைத் திட்டமே ஆகும் என்பதையும், அரசியலைக் கைப்பற்றி விடுவதாலேயே நம் பிறவி இழிவுகளோ, பொருளாதாரச் செழிப்போ, வாழ்வில் வளமோ உண்டாகிவிட முடியாதென்பதையும், இவைகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும், எதிரிகளான திராவிட மக்களின் உள்ளங்களே முதலில் சீர்பெற்று நிமிரவேண்டும் என்பதையும் திராவிடர்கள் தெளிவாக உணரவேண்டும்.

இதை யுணரும் போது இன்றைக்கு நாம் செய்ய வேண்டிய வேலை அரசியல் ஆக்கிரமிப்பு அல்லவென்றும், திராவிடர்களை ஒன்று சேர்த்து, உருவத்தால் பலராயினும் உள்ளத்தால் ஒருவரே என்ற பெருநிலையைக் காணப் பாடுபடுவதே, அதற்காக நமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துவதே தக்கது என்று, திராவிடமுன்னேற்றம் காணவிழையும் எவரும் முடிவு கட்டுவர்.

இதன் உண்மையை உணர்ந்து கட்டுப்பாடாக நின்று திராவிட உணர்ச்சியுடைய எழுத்தாளர்களும், பேச்சாளர்களும், தொண்டர்களும் உறுதி குலையாது உண்மையில் பற்றுவைத்துப் பணியாற்றுவார்களே யானால் நிச்சயமாக நாம் விரைவில் வெற்றிபெறுவோம், கண்ணுக்குத் தெரியும் வெற்றி கானல் நீரல்ல! கருத்தும் கவலையும் இருந்தால் கண்டிப்பாக அடைந்தே தீருவோம்! என்ற பெரியாரின் முடிவை நாம் அவர்களுக்கு எடுத்துக் கூறுகிறோம்.

இத்திருநாளைச் சிறப்பித்துப் பெருவெற்றியடையக் காரணமாக இருந்த, கட்டுப்பாட்டுக்கும், ஒழுங்குக்கும், பேர்பெற்ற தூத்துக்குடித் தொண்டர்களையும், மாநாட்டு நிர்வாகிகளையும் நாம் பாராட்டுகிறோம் என்பதோடு மற்றைய ஊர்களிலுள்ள திராவிடப் பெருங்குடி மக்களின் சார்பில் நாம் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு உங்களுடைய அன்பையும், தொண்டையும் எங்களால் வாழ் நாள் வரை மறக்கமுடியாதென்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

தோழர்களே! தோழியர்களே! திராவிடப் புரட்சித் திருநாளுக்கு, நிலையான இன்ப வாழ்வுக்கு வழி வகுத்துத் தந்தேன் என்கிறது தூத்துக்குடி. வெற்றிநிச்சயம் என்றாலும் விரைவும், தாமதமும் உங்கள் கையில் என்பதைத் தூத்துக்குடி விளக்கிவிட்டது. கட்டுப்பாடும் கடமை யுணர்வும் உண்மையில் கொண்டெழுந்தால் உறங்கவோ, உல்லாசக் கேளிக்கைக்கோ நேரமுண்டோ? என்று தூத்துக்குடி முழங்குகிறது.

முழக்கத்திற்குப் பதில் அல்ல! மூண்டெழுவீர் செயலில். இனி நாம் சூத்திரர்களாக வாழமாட்டோம் என்பதே நமது லட்சிய சொல். நமது மூச்சு. இதை நாம் நாள் தோறும் நாட்டில் பரப்ப வேண்டியதே நம் பேச்சு. உள்ளும் புறமும் இதை நாம் கைக்கொண்டொழுகுவதே நம் செயல்.

★

## சென்னைக் குள்ள நரி.

அமெரிக்காவில் நடைபெற்று வரும் ''நியூஸ் வீக்'' என்ற பத்திரிக்கை முதல் இந்தியக் கவர்னர் ஜெனரலாக வரப்போகும் தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களைப்பற்றி எழுதியுள்ள கட்டுரைக்கு 'சென்னைக் குள்ளநரி'' என்று தலைப்புக் கொடுத்திருக்கிறது.

அவரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது 'எவ்வித எதிர்ப்பையும், பேசியே தீர்த்து விடுவார்'' என்று புகழ்கிறது.

# தூத்துக்குடி தந்திருக்கும் முடிவுகள்.

★

### கழகக் கட்டுப்பாடு பற்றிய தீர்மானங்கள்.

திராவிடர் கழகச் சார்பாய் நடைபெறும் கிராம, தாலூகா மாவட்ட, மாகாண முதலிய மாநாடுகள் ஜில்லாக் கமிட்டி அனுமதியும், மாகாணக் காரியக் கமிட்டி அனுமதியும் பெற்றே நடத்தப்படவேண்டும்.

மாநாட்டு வரவு செலவுக் கணக்குகளை 15 நாளில் ஜில்லா கமிட்டிக்கும், மாகாணக் கமிட்டிக்கும் தெரிவித்து விடவேண்டும்.

மாநாட்டு வரவு செலவில் மீதித் தொகையைக் காரியக் கமிட்டிக் கருத்துப்படி பயன்படுத்தவேண்டும்.

இந்தத் தீர்மானத்துக்கு மாறாய் நடக்கும் கழக நபர்கள்மீது காரியக் கமிட்டி தனக்குத் தோன்றிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ளலாம்.

மாகாண, ஜில்லா, தாலூகாக்கமிட்டி கழக நிர்வாகசபை அங்கத்தினர்கள் கழகக் காரியங்களில் கருப்புச் சட்டை அணிந்திருக்கவேண்டும்.

பிரச்சாரத் தோழர்களும் மேடையில் பேச நேரும் தோழர்களும் அவசியம் கருப்புச்சட்டை அணிந்திருக்க வேண்டும். தவறுகிறவர்கள் மீறியவர்களாவார்கள்.

கழக அங்கத்தினர்கள், கழக சம்பந்தமான எவ்வித பலாத்காரம், கலவரம், குழப்பம் ஆகிய காரியங்களில் சம்மந்தப்பட்டவர்களாக ஏற்பட்டு விடக்கூடாது. அப்படி ஏற்பட்டால் அதற்குக் கழகம் பொறுப்பாளியல்ல என்பதோடு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள நேரிடும்.

### தீர்மானங்கள்.

1. உலக உத்தமர் காந்தியார் அவர்கள் எதிர்பாராத விதமாகக் கொலை செய்யப்பட்டதை வன்மையாகக்கண்டிப்பதோடு அன்னார் மறைவுக்கு இம்மாநாடு தனது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

2. பழயகோட்டை இளைய பட்டக்காரரும், திராவிடர் கழகப் பொருட்காப்பாளருமாகிய தோழர் என். அர்ச்சுனன் அவர்கள் தன் இளம் வயதில் இயற்கையடைந்தமைக்கு இம் மாநாடு தன் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

3. நகைச் சுவையரசு என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் விடுதலையடைந்தமைக்கு இம் மாநாடு தன்பெருமகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

4. சென்ற மாகாண மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்தவை போக, ஏனையவைகளையும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென வற்புறுத்துகிறது.

5. திராவிட நாட்டைத் தனிச்சுதந்தர நாடாக்குவதே திராவிட மக்களின் முடிவான அரசியல் கோரிக்கை என்பதை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

6. இந்திய அரசியல் நிர்ணயசபை என்ற பெயரால் டில்லியில் கூடுகின்ற சபை திராவிட மக்களின் பிரதிநிதித்துவம் பெற்றதல்லவென்றும், திராவிட மக்களை எவ்வகையிலும் கட்டுப்படுத்தக் கூடியனவல்லவென்றும் இம் மாநாடு தீர்மானிக்கிறது.

7. கருஞ்சட்டைப்படை என்று ஓர் தனியான ஸ்தாபனம் இல்லை என்று தலைவர் பெரியார் அவர்கள் 3-3-48ல் விடுத்த அறிக்கையை இம்மாநாடு ஆதரிப்பதுடன் கருஞ்சட்டைப் படை என்று ஒரு ஸ்தாபனம் இருப்பதாகக் கருதிச் சர்க்கார் 2-3-48ல் விடுத்துள்ள அறிக்கையானது பொதுமக்களுக்கும் அதிகாரிகளுக்கும் தவறான எண்ணங்களை உண்டு செய்வதால் மேற்படி உத்தரவைச் சர்க்கார் உடனே ரத்து செய்ய வேண்டுமென்று இம்மாநாடு வற்புறுத்துகிறது.

8. ஜஸ்டிஸ் கட்சி வேலைத் திட்டம் என்பதாக ஒவ்வொரு மாநாட்டிலும் ஒப்புக் கொள்ளப்பட்டு தீர்மானித்து வரும் வேலைத் திட்டத்தை இம்மாநாடு ஒப்புக்கொள்வதுடன், தற்கால நாட்டு மக்கள் நிலைக்கேற்ப ஷை திட்டத்தை மாற்றியமைக்க மத்திய நிர்வாகக் கமிட்டிக்கு இம்மாநாடு அதிகாரமளிக்கிறது.

9. மாகாணத்திலுள்ள எல்லா உணவு சிற்றுண்டி விடுதிகளையும், சர்க்காரே ஏற்றுநடத்துமானால்சர்க்காருக்கு வருமானம் அதிகமாவதுடன் மக்களுக்கு நல்லுணவு கிடைக்குமாதலால் சர்க்கார் இச்செய்கையை ஏற்று நடத்த முன்வர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறது.

10. பெரிய நகரங்கள்தவிர கிராமங்களில் தனிப்பட்ட நபர்கள் யாரும் மக்களுக்கு இன்றியமையாத தேவைப் பொருள்களான தடித்த ரகத்துணி, உணவுத் தானியங்கள், பருப்பு, எண்ணெய், பால் பொருள்கள், மாமிசவகை இவற்றை வியாபாரம் செய்ய அனுமதிக்கக் கூடாதென்றும், இவை எல்லாம் கூட்டுறவுப் பண்டகசாலை மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென்றும், நகரங்களில் கூட்டுறவுப் பண்டகசாலை தவிர தனிப்பட்ட நபர்களின் வியாபாரம் நீக்கப்படவேண்டுமென்றும் இம்முறையேகூட்டுறவுமுறையைநாட்டில் வளர்க்க உதவுமென்றும் எனவே சர்க்கார் இதற்கு ஆவன செய்யவேண்டுமென்றும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

11. சாதிகள் என்பவையே இந்நாட்டிலிருந்து ஒழிக்கப்படும் வரை சாதிவாரிப் பிரதிநிதித்துவமுறை அரசாங்க அலுவல்களில் நிரந்தரமாக இருந்து வரவேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

12. சென்னை மாகாணம் சம்பந்தப்பட்ட வரையில் இந்திய யூனியன் அரசாங்கம் சென்னைமாகாண சாதிவாரிப் பிரதிநிதித்துவமுறைச் சட்டத்தை தந்தி, தபால், ரயில்வே,கலால், அகில இந்திய ரேடியோ, அகில இந்திய உத்தியோகங்களில் அனுசரிக்க வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது.

13. இந்திய யூனியன் ரெயில்வேக்களில் உள்ள சகல சிற்றுண்டிச்சாலை, உணவு விடுதிகளிலும் ஒரு சாதியாரைக் கொண்டே நடத்துவதை இம்மாநாடு ஆட்சேபிப்பதுடன் மரக் கறி, மாமிச உணவு என்ற பாகுபாடு மட்டுமே கொண்டு எல்லோரும் ஏற்று நடத்தும் முறையில் செய்யவேண்டுமாயும் அதற்காக இருக்கும் ஆபீஸில் (கேட்ரிங் டிபார்ட்மெண்ட்) எல்லாச் சாதியாரும்இருக்கவேண்டுமென்று இம்மாநாடு அரசியலாரைக் கேட்டுக்கொள்கிறது.

14. திருச்சி மாநாட்டுத் தீர்மானங்கள் பெரும் அளவுக்கு நிறைவேறியிருப்பதையொட்டி இம்மாநாடு மகிழ்ச்சிஅடைவதோடு தமிழ்நாடு தவிர்த்த இதர ஆந்திர, கேரள, கன்னடியப்பிரதேசங்களில் பிரசாரம் துவக்கப் படுவதைஅடுத்த முக்கியதிட்டமாகக்கொள்ளவேண்டுமென்று இம் மாநாடு தீர்மானிக்கிறது.

15. திராவிட நாட்டிலுள்ள பிரஞ்சுப்பகுதிகள் திராவிட நாட்டுப்பிரிவினை ஏற்படும் பொழுது திராவிட யூனியனில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று பிரஞ்சிந்திய திராவிட மக்கள் 18-வது திராவிட கழக மாகாண மாநாட்டைக் கேட்டுக்கொள்கிறது என்று பிரஞ்சிந்திய திராவிடர் கழகம் தெரிவித்து கொள்கிறதென்று வந்துள்ள செய்தியைக் கண்டு இம்மாநாடு பிரஞ்சிந்திய மக்களுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறது.

16. வக்கீல்படிப்புக்காகப் பல ஆண்டுகள் படிக்கவேண்டும், பயிற்சி பெற வேண்டுமென்றிருப்பதும், ஒவ்வொரு வக்கீலும் பல சட்டங்களையும் படிக்கவேண்டுமென்றிருப்பதும், வக்கீல் பதிவுக் கட்டணத்தை அதிகமாக வைத்திருப்பதும், பொதுவாக வக்கீல்களுக்கே பெருத்த கஷ்டமாக இருப்பு

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தோடு கோர்ட்டு விவகாரத்தில் ஈடுபடுபவர்களுக்கும் அதிகச் செலவு ஏற்படுவதாயிருப்பதால் இவைகளைக் குறைத்தும் நீக்கியும் சவுகரியம் செய்யவேண்டுமாய்ச் சர்க்காரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

17. மதத்தின் பேரால் உயிர்ப்பலி செய்யப்படுவதைச் சர்க்கார் தடை செய்யவேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

18. அரசாங்க மின்சார இலாக்காவில், மிக அதிகப்படியாகப் பார்ப்பனர்களே உத்தியோகத்தில் இருப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், விவசாயத் தொழிலுக்கும் சிறப்பாகநெற்பயிர்ச்சாகுபடிக்கும்மின்சார வசதி அதிகப்படியாகப்பயன்படும்படி செய்யவேண்டுமென்று சர்க்காரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

19. இனாம் ஒழிப்புச் சட்டத்தைச் சீக்கிரமாக நிறைவேற்றி சிறியதாயிருந்தாலும், பெரியதாயிருந்தாலும், மத சம்பந்தமானதாயிருந்தாலும், மத சம்பந்தமற்றதாயிருந்தாலும் எல்லா இனாம்களையும் ஒரேயடியாக ஒழித்துக்கட்ட வேண்டுமென்று இம்மாநாடு சென்னை மாகாண அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

20. நாட்டில் நியாயஸ்தலங்களின் மூலமும், வக்கீல்களின் மூலமும் பொதுமக்களுக்குச் சௌகரியம் செய்யஒவ்வொரு கோர்ட்டிலும் இத்தனை வக்கீல்கள் தான் தொழில் நடத்தலாம் என்று எண்ணிக்கை நிர்ணயம் செய்தும், வக்கீல்கள் கேஸ் சம்பந்தவாரியாகச் சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தொகைக்கு மேற்பட்ட கட்டணம் வாங்கக்கூடாதென்றும், கேஸ் கொண்டுவந்து கொடுக்கும் ப்ரோக்கர்கள் கடுமையாய்த் தண்டிக்கப்படவேண்டுமென்றும், அடிக்கடி கட்சிக்காரர்கள் கோர்ட்டுக்கு வந்து வீண் செலவு செய்து அலைந்து கேஸ் எடுக்கப்படாமல் திரும்பிப்போவது நிறுத்தப்படவேண்டுமென்றும், சிவில்கோர்ட்டுகளில் சிறு தாவாக்கள் ரொக்க கடன் முதலியவை எல்லாம் சீக்கிரம் பைசல் (முடிவு) செய்ய சிறிய அதிகாரிகளுக்கு இந்த அதிகாரம் கொடுக்கப்படலாம் என்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

21. மாகாண வாசிகள் வாழ்க்கை ஒப்பந்தம் பதிவு செய்யும் முறை ஜில்லா ரிஜிஸ்டாருக்கு இருக்கும் அதிகாரத்துடன், சப்-ரிஜிஸ்டார்களுக்கும் அதிகாரம் கொடுத்து அமைக்க வற்புறுத்துதல்.

22. திராவிட நாகரீகத்திற்கும், முன்னேற்றத்திற்கும், உரிமைக்கும் விடுதலைக்கும் தடையாகவும், புறம்பாகவும் உள்ள பேச்சு வழக்கற்ற வடமொழியைத் திராவிட நாட்டுப் பள்ளிகளில், கட்டாயப் பாடமாக்கப் பார்ப்பனத் தலைவர்கள் பெருமுயற்சி செய்து வருகின்றதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறதுடன் அரசாங்கம் இதை அனுமதிக்கக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறது.

23. நாட்டில் மத சம்பந்தமல்லாத ஆட்சி நிலவ வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு விட்டதால் பள்ளிக்கூடத்தில் மத சம்பந்தமான, புராண சம்பந்தமான பாடங்கள் கற்பிக்கப்படக் கூடாது என்றும், அரசாங்கம் பல்கலைக் கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் பணம் எவ்வகையிலும் கொடுக்கக் கூடாதென்றும், கட்டாய இலவச ஆரம்பப் படிப்புக்கும் செகண்டரி படிப்புக்குமே சகல பண உதவியும் அரசாங்கம் செய்யவேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

இந்தி மொழி திராவிட நாட்டில் எந்த அளவிலும் உபயோகப்படுத்தக் கூடாதென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

எல்லாக் கல்லூரிகளிலும் போதனா முறை தமிழிலேயே இருக்கவேண்டுமென்றும்தொழிற்கல்லூரிகளிலும் இம்முறை அனுஷ்டிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

24. பெரும்பான்மை மக்கள் படித்திராத நாட்டில் ஜனநாயகம் நிலவுவது என்பது கூடாத காரியம் ஆதலாலும், படித்திராத மக்களுக்கு ஓட்டுரிமை அளிப்பது வெறும் வேடிக்கைக் கூத்தாகவும் ஜனநாயகம் என்பது வெறும் கானலாகாவும் தான் இருக்குமென்றும், ஆகவே திராவிட நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் கட்டாய ஆரம்பக் கல்வி அளிப்பதற்கான நடவடிக்கைகளை உடனே இந்திய யூனியனின் அரசாங்கமும் மாகாண அரசியலதிகாரமும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் இம் மாநாடு தீர்மானிக்கிறது.

25. சமுதாய அமைப்பு முறையிலுள்ள கோளாறுகளும் சில வகுப்புகளுக்குப் பாரபட்சமான சலுகைகளும் சில வகுப்பினருக்குச் சலுகையின்மையும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகவே யிருந்து வந்ததின் காரணமாக மேல் சாதி மக்களே அறிவுடைய மக்களாக ஆகவும் 100க்கு 90பேரான கீழ் சாதி மக்களாகக் கருதப்படும் திராவிடர்கள் அனைவரும் படிப்பறிவற்றவர்களாகவும் இருக்க நேர்ந்ததென்றும் இதைச் சரிப்படுத்த வேண்டுமானால் எல்லாக் கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் வகுப்பு விகிதாச்சாரத்தை அனுசரித்து இடம் அளிக்கப்படவேண்டுமென்றும் இம்முறை அனுஷ்டிக்காமலிருப்பது சகலருக்கும் சம சந்தர்ப்பம் வேண்டுமென்ற நியாயமான கொள்கைக்கு விரோதமானதென்று அதை அழிக்கக்கூடியதாகவே கருதப்படுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

26. நாடகம் சினிமா ஆகிய கலைகளின் மூலம் அறிவிற்குப் பொருந்தாத கருத்துக்களையும், புராணக் கொள்கைகளையும் புகுத்தி மக்களை மடமையின்பாற் படுத்தும் கொடுமையை இம்மாநாடு கண்டிக்கிறது. பொது மக்கள் அதுபோன்ற சினிமா நாடகங்களை ஆதரிக்கக்கூடாதெனக் கேட்டுக்கொள்கிறது.

27. பொது மக்களின் தேவைக்கு இன்றியமையாத சாதனங்களான மின்சாரம், சுரங்கம், போக்குவரத்து (ஏர்வேஸ் வாட்டர் வேஸ்) ஆகியஎல்லாவற்றையும் சர்க்காரே ஏற்று நடத்த வேண்டுமென்றும், இந்நாட்டில் சமதர்மத்தைத் தோற்றுவிப்பதற்கு முதற்படியாக ஒவ்வொருவரும் தமக்கே சொந்தமாக அதிகப்பட்சம் இந்த அளவுக்குத்தான் நிலங்கள், வீடுகள், ரொக்கப் பணம் முதலிய சொத்துக்கள் வைத்துக்கொள்ளவேண்டு மென்று நிர்ணயம் செய்ய வேண்டுவதுடன், பெரிய உத்தியோகஸ்தரின் உயர்ந்த சம்பளத்தைக் குறைத்துத் தொழிலாளரின் குறைந்த பட்சச் சம்பளத்தை அதிகரிக்கவேண்டுமென்று இம்மாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

28. இந்திய யூனியன் அரசாங்கம் தங்களது ஆட்சி மதசம்பந்தமற்ற (Secular) தென்று ஒப்புக்கொண்டு விட்ட பின்னரும், மத விழாக்களுக்கு விடுமுறை விடுவது, மத ஸ்தாபன பரிபாலன மென்று ஒன்று வைத்து நடத்துவதும், மத சம்பந்தமான ஸ்தாபனங்களுக்குப் பண உதவி செய்து வருவதும், மதஸ்தாபன சொத்துக்களுக்குச் சலுகைகள் அளிப்பதும், மத ஸ்தாபனங்கள் பேரால் உள்ள பெருவாரியான சொத்துக்களைப் பொதுமக்களுக்குப் பலனில்லாமல் இருக்க அனுமதிப்பதும் ஆகிய காரியங்கள் நடைபெறாதிருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமாய்ச் சர்க்காரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

29. தலைவர் பெரியார் அவர்களின் அறிக்கைப்படி இனிப் பார்ப்பனர்களைப் பிராமணர் என்று அழைப்பதோ, எழுதுவதோ கூடாதென திராவிடர் இயக்கத்தினரை மட்டுமன்றிப் பொதுவாகத் திராவிட இனத்தவர்களையும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

30. எல்லாத் தொழிற்சாலைகளிலும் தொழிலாளிகளுக்கு அவர்கள் பணம் செலுத்தாமலே மூலதனத்தில் 5ல் ஒரு பாகம் கட்டாயமாக ஒதுக்கப்பட வேண்டுவதுடன் தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் தகராறு ஏற்பட்டால் தொழிலாளர் பிரதிநிதியும், முதலாளி பிரதிநிதியும் இருவராலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரும் ஆக மூவர் அடங்கிய ஒரு போர்டாக அமைத்துத் தகராறு தீர்க்கப்பட

வேண்டுமென்று இம்மாநாடு சர்க்காரை கேட்டுக் கொள்கிறது.

31. உணவுப் பண்டமல்லாதவற்றை விவசாயம் செய்வதை அரசியலார் தடுக்க வேண்டுவதுடன், அப்படி அவசியமென்று பட்டாலும் ஓரளவுக்கு மட்டும் அனுமதி தரவேண்டுமென இம்மாநாடு அரசியலாரைக் கேட்டுக் கொள்கிறது.

32. தென்னிந்திய ரயில்வேத் தொழிலாளர்கள் மற்ற ரயில்வேத் தொழிலாளர்களைவிட மிகக் குறைந்த சம்பள விகிதங்களைப் பெற்று வருவதினால் புதிய சம்பள கிரேடுபடி தென்னிந்திய ரயில்வே தொழிலாளரின் சம்பளம் இதர ரயில்வே தொழிலாளர் நிலைக்கு உயர்த்திப்பிறகு சம்பளக் கமிஷன் விவாதங்களை அமுலுக்கு கொண்டு வருமாறு மத்திய அரசியலாரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

33. ஆதித்திராவிட மக்கள் தாங்கள் செய்துவந்த, செய்து வருகிற அடிமைத் தொழிலாகிய இழி தொழில்களை இழிவு என்று கருதி வெறுத்துக் கொண்டு வருகிறார்கள். அவ்விதம் வெறுப்புக் கொண்ட கிராமங்களில், சாதி இந்துக்களால் பல கிராமங்களில் பெரும் கொடுமைகள் இழைக்கப்பட்டு கஷ்டப்பட்டு வருகின்றனர். இவைகளைத் தாழ்த்தப்பட்டோர், மந்திரியாருக்கு எடுத்துக் கூறியும் கவனிக்கப் படவில்லையென்று தெரிவதால் இனியாகிலும் இவ்விதம் நடக்காமலிருக்க ஆவன செய்ய வேண்டுமாய் அரசியலாரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

34. திருவிதாங்கூர், கொச்சி, மலபார் ஆகிய இடங்களில், நமது கழகப் பிரசாரம் இதுவரையிலும் நடைபெறாத காரணத்தால் உடனடியாக பிரசாரக் குழு ஒன்றை நிறுவி நடைமுறை வேலைகளை ஆரம்பிக்கக் கட்டளையிடும்படி தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

மேற்கண்ட தீர்மானங்களை பிரரேபித்தும் வழி மொழிந்தும் அடியிற் கண்ட தோழர்கள் பேசினார்கள்:—

திருப்பூர் தோழர், எஸ். ஆர். சுப்ரமண்யம், திருவண்ணாமலை சேர்மன், ப. உ. ஷண்முகம், சென்னை மா. இளஞ்செழியன், மதுரை எம். அய்யாசாமி, பெத்தாம்பாளையம் பழனிசாமி, ஏத்தாப்பூர் ஒய். எஸ். அருணாசலம், அறுப்புக்கோட்டை எம். எஸ். ராமசாமி, எம். என். நஞ்சையா, விழுப்புரம் சேர்மன், எம். ஷண்முகம், திருவாரூர் சிங்காரவேலர், ஏ. கே. வேலன், சிவகங்கை இரா. ராம சுப்ரமண்யம், திருமதி குஞ்சிதம் குருசாமி, வேலூர் திருநாவுக்கரசு, பொன்னி ஆசிரியர் முருகு சுப்ரமண்யம், புலவர் குழந்தையா, புலவர் ஆறுமுகம், சென்னை கே. கோவிந்தசாமி, சென்னை எஸ். குருசாமி, ஏ. திராவிடமணி, மதுரை முத்து, பாராங்குசம், சாத்தூர் ராஜாமணி, நாகை காளியப்பன், அறுப்புக்கோட்டை பழனிசாமி, சி. முத்திருளாண்டி, சிவ ஷண்முக சுந்தரம், கே. பக்தவத்சலம், நாகை ஆர். வி. கோபால், சீனிவாசன். அரங்கராஜ், இ. ரா. ஷண்முகநாதன், வீரராஜன், , முத்தையா, திண்டுக்கல் மத்திரன், திருச்சி டி. கே. சீனிவாசன், திருவாரூர் ரங்கராஜ், திருவாரூர் கருணாநிதி, வைத்திலிங்கம் ஆகியவர்கள். சுமார் 10 முக்கிய தீர்மானங்கள் தலைவராலேயே பிரரேபிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

## எதிர்பாருங்கள் !

# வாழ்விலோர் திருநாள் !

★

தூத்துக்குடி மாநாட்டில் நிகழ்ந்த சம்பவங்கள், திராவிடர்கள் வாழ்வில் ஓர் திருநாள் சம்பவங்களாகும். இச்சம்பவங்கள் விரைவில் புத்தக வடிவில் வெளிவரும் நன்னாளை எதிர்பாருங்கள்.

கே. பாலையா, கரூர்.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

கியிருக்கும் ருஷ்ய நாட்டைப் பின்பற்றும் பொதுவுடைமையாளர். இவர்களெல்லாம் நீங்க திராவிடர் கழகம்தான் மக்களுக்காகச்சட்டசபைக்குவெளியில் நின்று மக்கள் மனோநிலையை உணர்ந்துஎதிர் கட்சிப் பிரச்சாரம்செய்துவருவதுடன் மக்களை அரசியலில் பங்கு கொள்ளப்பத்திரிகை,புத்தகங்கள், வெளியீடுகள், சொற்பொழிவுகள், மகாநாடுகள் மூலம், அரசியல் உணர்ச்சி உண்டுபண்ணி சமுதாய வாழ்க்கையில் மக்களை உயர்த்தி, ஜாதிபேதங்களையும் அதனால் ஏற்படும் இழிவையும் தொலைத்து மதக் கேடுகளிலிருந்தும் மக்களை விலக்கி, மக்கள் மக்களாக வாழ்ந்து அரசியலில் சமபங்கு கொள்ளவும், திராவிடஇன உணர்ச்சி பரவவும் உழைத்து வரும் கட்சியாகும்.

ஆகவே இதுவரை உலகநிலை, நம் நாட்டுநிலை, அரசியல் கட்சிகள் நிலை இவை குறித்துக் கவனித்தோம். இனி திராவிடரான, தமிழர், ஆந்திரர் கேரளர், கன்னடர், தனித்தனி மக்கள் குழுவாய்த் தனி ஆட்சி செலுத்தவும் பின்னர் இவர்களெல்லோரும் திராவிட இன உணர்ச்சியால் ஒரு கூட்டு ஆட்சியில் சேர்ந்துவாழவும் நல்லநாளுக்குவழி தேடுவோம்.நாம் நினைத்தவாறே இந்நால் வரும் தனி மாகாணம் வேண்டும், தங்கள் தங்கள் உரிமைகளும் காப்பாற்றப்பட வேண்டுமென்றும் வெளிப்படையாய்ச் சொல்லிக் கொள்ளுகின்றனர். ஆந்திரரும், தமிழரும் சமீபத்தில் தனிமாகாணம் பெறுவர். மற்றவர் தனிமாகாணம் காண சில காலமாகலாம். திராவிடர் கழகம் கேரளர்க்கும், கன்னடர்க்கும் தனி மாகாணம் வகுக்கத் துணைசெய்து தொண்டாற்றும். தென் திருவிதாங்கூரில் தமிழர் தமிழ் நாட்டுடன் வாழ்வதே நியாயமாதலால் அதற்கும் திராவிடகழகம் பணியாற்றும். திராவிடம் கூட்டு ஆட்சியாக இணைக்கப்பட்டு தனியாக நிற்க வடநாட்டார் செய்யும் தவறுகளும், பெரும் நாட்டை ஓர் இடத்திலிருந்து ஆள முயல்வதில் ஏற்படும் கஷ்டங்களும், அதனால் ஏற்படும் தவறுகளும், ஜனநாயகம் சிறு சிறு நாடுகளில் தான் நன்கு அமையும் என்ற மறுக்கமுடியாத உண்மையும், காலஞ்செல்லச் செல்ல உண்மைகள் வெளியாகி உண்மையல்லாதவை அழிவதும், பிடிவாதங்கள் நீங்குவதும், நியாயங்கள் பிறப்பதும்,இவைபோன்ற உலக உண்மை அறிவுகளும் நமக்குக் காலத்தில் நம் குறிக்கோளை அடையச் செய்யும். அயர்லாந்து எவ்வளவு காலம் போராடினது தனி நாடு ஆக. வங்காளம் பிரிக்கப்பட்டது 1906-ம் ஆண்டில். அதை எதிர்த்துச் செய்யப்பட்டகிளர்ச்சி வெற்றியானது 1911ல். இப்போது 32 ஆண்டுகள் கழிந்து பிரிந்துதானே மக்களால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு அதே மக்களால் இரு நாடாக விளங்குகின்றது. இவை போன்ற உலகச் சரித்திரச் சான்றுகள் நம்மை ஊக்கிவைக்கும்.

(தொடரும்)

★

## கைமேல் பலன்!

## கைலாயம்திறந்துவிட்டது!

நேப்ளஸ் மே. 10. ஓர் பாலத்திற் கடியில் உணவு அருந்திக் கொண்டிருந்த 13 யாத்திரீகர்கள் அகால மரணமடைந்தனர். இப்பாலத்தின் மீது ஓர் ரயில் சென்றபோது செங்கல் கட்டடம் ஒடிந்து இவர்கள் மேல் விழுந்து விட்டது. இவர்கள் ஓர் புண்ணிய கோயிலுக்கு யாத்திரை சென்று கொண்டிருந்தனர்.

இச்சம்பவம் நேப்பள்ஸிக்கு 40 மைல் தூரத்தில் நிகழ்ந்தது.

# சட்டசபை நுழைவு நம் சங்கடத்தைப் போக்காது! வெளிப்பிரச்சாரமே வெற்றிக்கு வழி!

★

[3ம் பக்கத் தொடர்ச்சி]

சபைக்குச் செல்லமுடியாது. செல்ல முயன்றால் நம் கழகத்தார் தாங்கமுடியாத பெருஞ்செலவு ஒரு பக்கம் இருந்தாலும், பெரும் போராட்டம் நமக்குள்ளாகவே (திராவிடர்க்குள்ளாகவே) ஏற்படும். எதிரிகள் வசமிருக்கும் திராவிடர்கள் அத்தனை பேரும் நமக்கு எதிரிகளாய் இருந்து நமக்குத் தொல்லை கொடுத்து நம்மைத் தோற்கடிப்பார்கள். எதிரிகளுக்கு நமக்குத்தொல்லைகொடுக்கவும், விஷமப்பிரச்சாரம் செய்யவும் இன்று வசதிகள் அதிகம். காலித்தனம், குழப்பம் ஏற்படுத்தத் தகுந்தபடி நம் ஆள்களே தாராளமாய் அவர்களிடம் இருக்கிறார்கள். ஓட்டர்களுக்கு நாம் நிற்பதனால் நமக்கு ஓட்டு செய்யும் படியாக போதிய அறிவு இன்னமும் ஏற்பட்டு விட்டதாகச்சொல்ல முடியாது. நாம் அரசியலில் போட்டி போடுவதில்லை என்பதினாலேயே பணமூட்டைகள், சந்தர்ப்பவாதிகள், சுயநலமிகள் நம்மைவிட்டுப் போய்விட்டார்கள் என்பதோடு, எதிரிகளின் தொல்லையும் ஒரு அளவுக்குக் குறைந்தது. மக்கள் மனம் மாறும்படியான காரியம் செய்ய நம் பிரச்சாரத்திற்குத் தாராளமாய் இடம் கிடைத்து வருகிறது. நம்மை விட்டுப் பிரிந்து எதிரிகளின் வசத்தில் இருக்கும் நம் (திராவிட) மக்களுக்கும் மனம்விட்டு, கவலை விட்டு, பயம் விட்டு, எதிரிகளுடன்பிணங்கிப்போராட்டம் நடத்த வசதியும், துணிவும் ஏற்படுகிறது. நாம் அரசியலில் பிரவேசிக்கிறோம் என்றால் பழையபடி அங்குள்ள நம்மவர்கள், அனுமார், சுக்ரீவன், விபீஷணன்மார்களாகவே ஆகிவிடுவார்கள். நம் நாட்டுப் பாமர மக்கள் இருக்கும் நிலையிலும், ஒவ்வொரு பாகத்தில் ஒவ்வொரு வகுப்பார் அந்தந்தப் பாகச் சுயநலத் தலைவர்களுக்கு, வகுப்புப் பேரால் அடிமைப் பட்டுக்கிடக்கும் நிலையிலும், நாம் பயன்படத்தக்க அளவுக்காவது கழகத்தின் பேரால் வெற்றி பெறுவோம் என்று கருதுவதற்கில்லை. அப்படி வெற்றி பெற்றாலும் இன்றையச் சூழ்நிலை அரசியல் என்பது 'ஜான்சன்' அவர்கள் சொன்னபடி "முதல் நெம்பர் அயோக்கியத்தனம்" என்பதை ருஜுப்பிக்கும் மாதிரியில் நடந்து தீரவேண்டியதாய் இருப்பதால், இந்த நிலையில் அங்கு செல்லுபவர்கள், இன்று சென்றிருப்பவர்களைவிட அதிகமான யோக்கியர்களாக இருக்க முடியும் என்று நம்மால் கருத முடியவில்லை.

பொதுவாக இன்றைய நிலைமை, நாசமும், கட்டுப்பாடு, ஒழுக்கம், நாணையம் ஆகியவை அற்ற தன்மையும் வளர்ச்சி பெற்றுக்கொண்டு போகிற நிலைமையாக இருந்து வருகிறது.

இது மாறவேண்டுமானால் அப்படிப்பட்ட நிலைமையில் இருப்பவர்களோடு போட்டி போடுவதால், அவர்களையெல்லாம் நமக்கு எதிராக ஒன்று சேரும்படி செய்வதால் நம் கருத்து பரவாது, நம் நிலைமை மாறமுடியாது. நாம் அவர்கள் ஜோலிக்குப் போகாமல் வெளியில் இருந்து, நிலைமை மாறவேண்டும் என்று பிரச்சாரம் செய்வதைத் தவிர இன்றைக்கும் இன்னும் சிறிது நாள்களுக்கும் நமக்கு வேறு வழியில்லை என்றே எனக்குப் படுகிறது. நான் 40, 50 வருட காலமாகவே மக்களுடன் பழகுகிறேன். உலக அனுபவமும், அரசியல் அனுபவமும், பாமர மக்கள் சுபாவ அனுபவமும் ஒரு அளவுக்குப் பெற்று இருக்கிறேன். "தன்னலமற்ற தொண்டுதான் பொதுநலத்துக்குப் பயன் கொடுக்கிறது" என்பது எனது அனுபவம். இனி தனி மனிதர்களுக்கு மாத்திரமல்ல, கழகங்களுக்கும் கூடத்தான் இம்முறை பயன்படுகிறது.

"எங்கள் கழகம் சட்டசபைக்குப் போட்டி போடுவதில்லை. உங்களை நாங்கள் ஓட்டுக் கேட்பதில்லை" என்று மக்களிடம் கூறி நம் குறைகளைச் சொன்னால் மக்கள் மற்றவர்கள் வார்த்தைகளைவிட நம்வார்த்தைகளுக்குச் சற்று அதிகமாகக் காது கொடுப்பார்கள். மக்கள் மாத்திரம் அல்ல மந்திரிகளும் சற்று குறைவாக அடக்குமுறையைப் பிரயோகிப்பார்கள்.

"நாங்கள் உங்கள் பதவிக்குப் போட்டி போடுவதில்லை. உங்களைக் கவிழ்க்க முயற்சிப்பதில்லை. இன்ன காரியத்தைச் செய்யுங்கள். உங்களை ஆதரிக்கிறோம்" என்றால் மந்திரிகளும் ஏதாவது கூடியதைச் செய்ய ஆரம்பிப்பார்கள். அவர்களது உள்துறைப்போட்டி எதிரிகளிடம் துணிச்சலாகப் போரிடுவார்கள். பதவிப் போட்டிக்கு நாம் போக ஆரம்பித்தால், பார்ப்பனர்கள் வெளிப்படையாகவெளியில் வந்துஎதிர்க்கமாட்டார்கள். திராவிடமக்களால் தான், அதாவதுபதவியில், சுயநலத்தில் பற்றுள்ள திராவிட மக்களால்தான் நமக்குத் தொல்லை அல்லது தடை ஏற்படலாம். அவர்களைத் தாராளமாய் விட்டு விட்டால் அவர்களில் பெரும்பாலோரே பார்ப்பனர்களிடம் போரிட்டுக் கொண்டு, நமது கொள்கைகளையே தங்களது போர்த்திட்ட ஆயுதங்களாகக்கூட பயன்படுத்துவார்கள். அவர்களுக்கும் அதுவெற்றிக்கு நல்ல மார்க்கமாக இருக்கும். அப்படி வெற்றி பெற்றால் அது நமக்குப் பயன்படலாம். ஆகையால்தான் திராவிட கழகம் யாருடனும் போட்டிக்குப் போகாத ஒரு பிரச்சார ஸ்தாபனமாய் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறேன் என்பதோடு, அரசாங்கத்தினுடையவும் பார்ப்பனர்களுடையவும் குறைகளையும், குற்றங்களையும், தன்மைகளையும், சூழ்ச்சிகளையும், எல்லாம் வெளியாக்குவதையும், பிரச்சாரம் செய்வதையும் கருத்தாய்க் கொண்ட பிரச்சாரக்கழகமாய் இருக்க வேண்டும் என்கிறேன்.

இவ்விருவர்களுடைய அடக்குமுறைகளுக்கும், தொல்லைக்கும் ஆளாக நேரிட்டால் அதுவும் நம் பிரச்சாரத்துக்கு ஒரு நல்ல பலமும், பயனும், வெற்றிக்கு ஒரு மார்க்கமும் ஆகும். நிலை குலைந்து இனப்பற்று அற்று, சின்னாபின்னப்பட்டுக் கீழ் நிலையில் இருக்கும், யாதொரு ஆதரவற்ற ஒரு சமுதாயத்திற்கு, சிறிது காலத்திற்காவது இதைவிட அதாவது மக்களை அதை உணரும்படி செய்வதைவிட வேறு வழி இல்லை என்றே கருதுகிறேன். பார்ப்பனீயத்தின் பலமும் அதனின் விஷத்தன்மையும், அது கடிக்கும் முறையும் நம்மில் அநேகருக்குத் தெரியாது. மற்றும் அரசியலில் நாம் போட்டி போடுவது என்றால் அதன் அருத்தம் என்ன? பார்ப்பனர்களோடு போட்டி போடுவது என்பதுதானே? நாம் போட்டிபோட ஆரம்பித்தால் நமது இனத்துரோகிகளும், சுயநலக்காரர்களும், பண மூட்டைகளும், சமய சஞ்சீவிகளுமாய் இருப்பவர்கள் பதவிக்கு யாரைத் தஞ்சமடைவார்கள்? பார்ப்பனர்களைத் தானே தஞ்சமடைவார்கள்?

### நம் பண மூட்டைகள் பார்ப்பனர்கள் காலடியில்.

இன்று பாருங்களேன்: நம்மில், நான் மேலே சொன்ன கூட்டத்தைச் சேர்ந்த அத்தனை ஆட்களும் இன்று பார்ப்பன அடிமைகளாக, பார்ப்பனர்கள் காலடிகளில் இருக்கிறார்களா இல்லையா?

1000, 2000 வேலி நிலம் கொண்ட மிராசுதார்களும், 8 கோடி 10 கோடி ரூபாய் செல்வம் கொண்டுள்ள பணக்காரனும், உலகம் மதிக்கும் அறிவாளிகளும், மாபெரும் நம் மடாதிபதிகளும் ஒரு பொதுக்காரணமும் இல்லாமல் தன் சுயநலத்துக்கு ஆகமாத்திரமே, பார்ப்பனர்களின் காலடியில் கிடக்கின்றார்கள் என்றால், இனியாரைவிட்டு நாம் போட்டி போடச் செய்ய முடியும்? அவர்களுக்கு வெற்றி ஏற்பட்டால்தான் நம் பயன் என்ன? உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், நஞ்

# ஆட்டங்கொடுக்கிறது இன்றையச்சர்க்கார் அதன் அறிகுறியே அடக்குமுறைகளும் அபாண்டப்பழிகளும்.

மால் சிறிதளவாவது மதிப்புப் பெற்றவர்கள் எல்லோருமே இன்று பார்ப்பனர்கள் காலடியில், பார்ப்பனர்களுக்குப் பயந்து சந்து பொந்துகளில் அனாமதேயமாய்க் கிடக்கிறார்கள் என்றால், இனி யாரை நாம் நம்ப முடியும்? நம் கழகம் சுயநலவாதிகளுக்கு முன்னேற ஒரு படிக்கட்டாய் இருக்கிறது என்று சொல்லப்பட்டாலும், நான் அதற்காக வருத்தப்பட மாட்டேன். அப்படிப்பட்டவர் நம் கழகத்தில் விளம்பரம் பெற்று, எதிரி கும்பலில் சேர்ந்தாலும், அவர்களை நாம் குறை கூறவில்லை என்றால், அவர்களுக்கு நாம் போட்டி இடவில்லை என்றால், அவர்கள் நம்மிடம் படித்ததை அங்கு தாராளமாய் ஒப்புவிக்கவாவது தைரியம் கொள்வார்கள்.

ஆதலாலும் நம் கழகம் இன்றைய நிலைக்கு ஒரு பிரச்சாரக் கழகமாகவே இருக்க வேண்டுமே ஒழிய, சிறிதுகூட பதவிப்போட்டியோ, அரசியலைக் கைப்பற்ற வேண்டும் என்கிற எண்ணமோ கூடாது என்பது எனது தாழ்மையான கருத்து. இந்த நிலையில் நம் கழகம் உண்மையாய் இருக்கும் வரை கெடுதி ஒன்றும் வராது. அதற்கு மாறாய் நம் கழகத்துக்குப் பலம் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கும். நம்மை அறியாமலே நம் கொள்கைக்கு நல்ல வெற்றி கிடைத்துக் கொண்டும் இருக்கும். ஆதலால் நாம் அரசியலைப்பற்றிக் கவலைப் பட வேண்டிய அவசியமில்லை.

## நம் நிலை.

நம் கழகம் இன்று சுமார் 50000 (அய்ம்பதினாயிரம்) அங்கத்தினர்களையும், சுமார் 400 க்கு மேற்பட்ட கிளைக் கழகங்களையும், சுமார் 40-ஆயிரம் ரூபாய் போன்ற நிதியையும் ஏராளமான இளைஞர்கள், மாணவர்களையும் கொண்டு இருக்கிறது. இது சேலம், திருச்சி மாநாடுகளில் போட்ட திட்டங்கள் ஒரு அளவுக்கு நிறைவேறி இருப்பதைக் காட்டுவதாகும். மற்றும் நம் கழகக் கொள்கைகளைப் பரப்பவும், கழகத்தை ஆதரிக்கவும், கழகத்துக்கு விரோதமாய் எதிரிகள் கட்டுப்பாடாய் நடத்தும் விஷமப் பிரசாரத்தைத் தகர்க்கவும், 'விடுதலை' என்கின்ற ஒருதினசரிப் பத்திரிகை கழகப் பொருள் உதவி எதுவும் இல்லாமல் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் வெளியிடவேண்டியதான தன்மையில் நடந்து வருகிறது. கழகத்தை, கழகக் கொள்கைகளை ஆதரிக்கும்தன்மையில் 40, 50 க்கு மேற்பட்ட வார, மாதப் பத்திரிகைகளும் வெற்றியோடு நாட்டில் நிலவுகின்றன. அதே தன்மையில் பல புத்தக வெளியீடுகளும் வெளியாகி வருகின்றன. நகைச்சுவையரசு என். எஸ். கிருஷ்ணன், பாகவதர் ஆகியவர்கள் விடுதலை பெற்று இருக்கிறார்கள். கிருஷ்ணன் அவர்கள் பல நடிக மணிகள் நம் முக்கிய தொண்டாகிய சமுதாயச்சீர்திருத்தக் கொள்கைகளையும் கொண்டு நாட்டின் பல பாகங்களில் நாடகம் சினிமாக்களில் நடித்து வருகிறார்கள். இயக்கப் பாடல்களும் எங்கும் சிறுசிறு குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை பாடப்பட்டு வருகின்றன. கழக அங்கத்தினர்களாக அத்தனை பேரும் இல்லாவிட்டாலும், பெரும் அளவிற்கு மக்கள் கருப்புச் சட்டை அணிந்து வருகிறார்கள். தமிழ் மாவட்டங்கள் எங்கும் நாள் தவறாமல் பல தோழர்களால் பொதுக் கூட்டங்கள் கூட்டப்பட்டும், கழகக் கொள்கைகள் பிரசாரம் செய்யப்பட்டும் வருகின்றன. கடவுள், மதவெறி, மூடநம்பிக்கை முதலியவை மக்களுக்குள் பெரிய அளவுக்குக் குறைந்தும், பலருக்குள் அகற்றப்பட்டும், பலபிடிவாதக்காரர்கள் சிந்தனைக்கு ஆளாகியும் வருகின்றன. புராண சம்பந்தமான, மதசம்பந்தமான உற்சவாதிகள், பண்டிகைகள் கதை காலட்சேபங்கள் ஆகியவை திராவிட மக்கள் உள்ளத்தில், திராவிடப் பெண்மணிகள் உள்ளத்தில் ஒரு அளவு வெறுப்பைப் பெற்றுவிட்டன. திராவிட மாணவர் கழகம் தமிழ்நாடு முழுவதும் மாபெரும் தொண்டு செய்து மக்கள், மாணவர்கள் உள்ளத்தில் பெரும் உணர்ச்சியையும், இன மானப்பற்றையும் உண்டாக்கி இருக்கிறது.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இன்று காங்கரஸ் சர்க்கார், அல்லது சுயராஜ்ஜிய சர்க்கார் என்கின்ற சர்க்கார் வட்டாரமானது "திராவிடர் கழகத்தை அடியோடு அடக்கி, ஒடுக்கி அழித்தால் ஒழிய, அடுத்த தேர்தலில் தாங்கள் இருந்த இடமே தெரியாமல் போய்விடும்" என்கின்ற தன்மையில் ஒரு அளவு கவலை, திகிலோடு நம் மீதும், நம் இளைஞர்மீதும், நம்மாணவர்கள் மீதும் அடக்குமுறையும், வம்புவழக்கும், அபாண்டப்பழி சுமத்தித் தொல்லை கொடுப்பதுமான காரியங்களைச் செய்து வருகிறதுடன் சர்க்கார் சட்டசபை கூடும்போதெல்லாம், நம் கழகத்தைப்பற்றி, கழக மக்களைப் பற்றி விஷமப் பிரச்சாரம் செய்வதையே, சட்டசபை வேலையாகவும், மெம்பர்கள் கேள்வியாகவும், மந்திரிகள் பதிலாகவும் இருந்து வரும்படியான அளவுக்குச் சர்க்காருக்குப் பயத்தைக் கொடுத்திருக்கிறது என்பேன். எங்கு எது நடந்தாலும் "திராவிடர் கழகத்தார் செய்தது" "கருப்புச் சட்டையாளர்கள் பண்ணியது" என்று பழிசுமத்தி நம் கழகத்தை அடக்கித் தீரவேண்டுமென்று அவர்களுக்கு இன்றியமையாததாகி விட்டது. காங்கரஸ் சர்க்கார் திகில் கொண்டு விட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. எப்படி எனில் சர்க்கார் அதிகாரிகள் அத்தனை பேருக்கும் சுற்றுத்திரவு (சர்க்குலர்) சென்றிருந்தால் எப்படிக் காரியம் நடக்குமோ, அப்படிப்போல் அதிகாரிகள் அதிலும் பார்ப்பன அதிகாரிகள் எங்கும் மிக ஊக்கத்தோடு, உற்சாகத்தோடு நமக்குத் தொல்லை கொடுத்து வருகிறார்கள். சர்க்கார் தயவுபெறும் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் யாவுமே நமக்கு பச்சை எதிரிகளாக இருந்து தொல்லை கொடுத்து வருகின்றன. பெரிதும் நமக்காக என்றே ஏற்பட்ட அண்ணாமலை நகர் தமிழர் பல்கலைக் கழகம் கூட காங்கரஸ் சர்க்கார் ஏற்பட்ட பிறகு அதற்கு அடிமையாகி, நம் மாணவர்களுக்குச் செய்யும் தொல்லைக்கு எல்லையில்லை. 'இச்சர்க்காரே என்றும் சதம்' என்று அப்பல்கலைக் கழகம் கருதுகிறது போலும். மற்றும் திருவண்ணாமலை முதலிய 20, 25 இடங்களில் போலீஸ் அதிகாரிகளும், காங்கரஸ் கலகக்காரர்களும் நமக்குச்செய்த; செய்யும் தொல்லை, அநீதி, ஆகியவைகளுக்கு எல்லைகாட்டமுடியவில்லை. ஒரு திராவிடர் முதல் மந்திரி ஆகியும், இன்றும் சர்க்கார் கொள்கை இதிலிருந்து சிறிதாவது மாறி இருப்பதாகக் காணக்கூடவில்லை.

எங்கும் நம் கொடிகள் பிரித்து நாசம் செய்யப்படுகின்றன. நம் தொண்டர்கள் சர்க்கார் அதிகாரிகளால் மிரட்டப்படுகின்றனர். இதற்கெல்லாம் காரணம் நம் கழகத்துக்கு இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் செல்வாக்கைக்கண்டு பயந்து தாங்கள் இன்னதுதான் செய்வது என்கிற நிதான் அறிவில்லாமல் தடுமாறுவதும், பார்ப்பனர், பார்ப்பன சட்டசபை அங்கத்தினர்கள், பார்ப்பன அதிகாரிகள், ஆகியவர்களின் இயற்கைப் புத்தியும், பார்ப்பனப்பத்திரிகைகளின் தூண்டுகோலுக்கும், கட்டளைக்கும், அடிபணியவேண்டிய நம் மந்திரிகள், காங்கரஸ் பிரமுகர்கள் ஆகியவர்களின் நெருக்கடியான தன்மையும் தவிர வேறு இல்லை என்றே சொல்லலாம். இப்படிப்பட்ட ஒரு பெருமையான நிலையை நம் கழகம் அடைந்திருப்பதற்கு அதிலும் இந்த இரண்டு ஆண்டுகளுக்குள் சிறப்பாக ஒரு ஆண்டுக்குள், இந்நிலை அடைந்திருப்பதற்கு

# வெள்ளையரிடத்தில் கொள்ளையர் அமர, வெட்டும், குத்துமே தலைவிரித்தாடுகிறது.

காரணம் என்ன? தோழர்கள் இந்த இடத்தில் சற்றுக்கவனமாய்ச் சிந்திக்க வேண்டும். அதிலும் ஒரு சில பொறுப்பும், மதியும் அற்ற இளைஞர்கள் தாங்கள் செய்வது என்ன என்பதை உணராமல், கழகத்தின் பேரால் பெற்ற செல்வாக்கை துஷ்பிரயோகம் செய்து கொண்டு வசதிப்பட்ட இடத்திலெல்லாம் விஷமப்பிரசாரம் செய்து வந்தும், சில இளைஞர்கள் மாணவர்கள் உள்ளத்தில் நஞ்சை ஊட்டி வந்தும், கழகம் இந்த நிலை அடைந்திருப்பதற்குக் காரணம் என்ன? அங்கத்தினர்கள் சேர்ந்தார்கள், கேட்ட அளவு நிதி சேர்ந்தது. கிளைகள் ஏற்பட்டன. மக்கள், மாணவர்கள் உள்ளம் கொள்ளை கொள்ளப்பட்டன. கழகக் கொள்கைகள் செவ்வனே பரவின. பல திட்டங்கள் காரியத்திலும் சிறிதாவது நடைபெறமுற்பட்டன. பல அறிவாளி மக்களின் மதிப்பையும்பெற்றது. சர்க்கார் பீதி அடையும் படியான செல்வாக்கையும் பெற்றது. "சென்னைக்குமேல் திருவாரூர்" "திருவாரூருக்கு மேல் சேலம்" "சேலத்திற்கு மேல் திருச்சி" "திருச்சிக்கு மேல் தூத்துக்குடி" என்கிற தன்மையில் மக்கள் உணர்ச்சி, ஆதரவு காணும்படி வளருகிறது. அதுவும் "திராவிடர் கழகக் கொள்கைகள் முட்டாள்தனமானது" என்றும், தலைவர் "சர்வாதிகாரத் தன்மை வாய்ந்தவர்" என்றும் ஏமாற்றமடைந்த ஒரு கூட்டத்தாரால் ஏளனமும் குறை கூறலும் செய்யப்படுகிற நிலையில், இந்த வளர்ச்சிக்குக்காரணம் என்ன? எனக்குத் தோன்றிய வரையில் காரணம் என்னவென்றால், நாடு இன்றுள்ள நிலைக்கு இக்கொள்கையைத்தான் வேண்டி இருக்கிறது, விரும்புகிறது என்பதும், அதற்கேற்ற பாதைக்கு மக்கள் கொண்டுவரப்பட்டு விட்டார்கள் என்பதும், இயக்கம் வேரூன்றிவிட்டது என்பதும் தான் எனக் கருதுகிறேன். ஏனெனில் மற்ற ஸ்தாபனங்களைப்போல் நம் இயக்கத்துக்கு என்று முழுநேரத் தொண்டர்கள் யாருமே இல்லை. பொறுப்பைச் சுமப்பவர்களும் அதிகம் இல்லை, இயக்கத்தால் மக்கள் அடையக்கூடிய தனிப்பட்ட லாபம், பதவி, ஒன்றும் நம் இயக்கத்தில் இல்லை. இந்த 25 வருடகாலமாக இயக்கம் இருந்து வருவது போன்றே ஒரு சாதாரண ஸ்தாபனமாகத்தான் இன்றும் இருந்து வந்தது என்பதோடு, ஸ்தாபனத்துக்கு உள்ள சடங்குகளும் ஒரு அளவுக்குத்தான் நடந்து வர முடிந்தன என்றாலும் காலப்போக்கானது, சூழ்நிலையானது ஒரு சாதாரணமான நம் கழகத்துக்கு இவ்வளவு தன்மையை உண்டாக்கி இருக்கிறது. ஆகவேதான் இந்த இயக்கம் நம் எதிரிகளுக்கு ஒரு செல்வாக்குள்ள எதிர்க் கட்சி என்று தோன்றும்படியாக ஆகிவிட்டது. இது வேர் ஊன்றிவிட்டதுடன், கிளைவேர் பரவிப் படர்ந்துவிட்டது. இனி இது தானாக இயங்கவும் வளரவுமான தன்மை பெற்று விடலாம். எப்படிப்பட்ட புயல் பேய்க்காற்றுக்கும் சிறிதும் ஆட்டம் அசைவு கொடுக்காது.

இப்படிப்பட்ட நிலையில் நாம் இன்னும் சிறிது கட்டுப்பாடாக இயக்கத்தின் கொள்கை வழி நின்று, திட்டப்படி நடந்து படிமுறையோடு மக்களுக்கு உண்மையான வழிகாட்டிகளாக இருக்கப் பாடுபட்டோமானால், நம் இயக்கமே நம்நாட்டு அரசியலையும், மத இயலையும், அது யார்வசமிருந்தாலும் நடத்தும் படியான இயக்கமாக ஆகிவிடக்கூடும் என்று நம்பிக்கை கொள்ளுகிறேன். எல்லாத் திராவிட மக்களும் நம்மோடு வந்து சேரா விட்டாலும், நன்றாகச் சுய அறிவோடு சிந்தித்துப்பார்த்துநம்கொள்கையைச் சரியென்றுபட்டால் தவக்கமின்றிப் பின்பற்றி, திட்டத்தின்படி நடந்தால் அதுவே மேலான உதவி என்றும், நம்கீழ் இருந்து ஆற்றும் இயக்கத் தொண்டு என்றும் கருதுகிறேன்.

## தற்கால அரசியல் நிலை.

இனி இன்றைய அரசியல் நிலை பற்றிச் சிறிது பேச ஆசைப்படுகிறேன். "வெள்ளையன் (பிரிட்டிஷார்) கையில் இருந்த நிர்வாக ஆதிக்கமானது இந்தியர்கள் கைக்கு ஏகபோகமாய் மாற்றப்பட்டு விட்டது" என்று ஆன நாள் முதல் நாட்டில் அராஜகம் தலைவிரித்தாடத் தொடங்கிவிட்டது. இந்நாட்டு மக்களுக்குள்ளாகவே கொலை, கொள்ளை, நாசம், கேடு, கலகம், காலித்தனம், குழப்பம் ஆகியவைகள் நாடெங்கும் கண்ட கண்ட முறையில் நடந்து வருகின்றன. ஒழுங்குமுறை, கட்டுப்பாடுமுறை, மேல்படி கீழ்படி முறை என்பவை மிக மிகக் குறைந்து போய் விட்டன. சர்க்காருக்கும், நிர்வாகத்திற்கும், நீதிக்கும், அதிகாரிக்கும் மதிப்பு என்பதும், அடங்கி நடப்பது என்பதும், பெரும் அளவுக்கு இல்லாமல் போய் விட்டது. நீதிக்கு நம்பிக்கையும் இடமுமில்லாமல்போய் விட்டது. லஞ்சம், தபால்களுக்கும் விண்ணப்பங்களுக்கும் ஸ்டாம்பு ஒட்ட வேண்டியதுபோலும், பாரபட்சம் வர்ணாஸ்ரமம் மலிந்து விட்டன. மக்களுக்கு அதிகாரிகளிடம் மதிப்பில்லை. அதிகாரிகளுக்கு மேலதிகாரிகளிடம் மதிப்பில்லை. மேலதிகாரிகளுக்கு மந்திரிகளிடம் மதிப்பில்லை. மந்திரிகளுக்குத் தங்கள் சுயநல வேலையைத் தவிர தங்கள் கடமைகளிடத்தில் மதிப்பில்லை. மந்திரிகளுக்கு நாட்டின் ஆட்சி எப்படி இருக்க வேண்டும், எதெதில் எப்படி எப்படிக் கவலை செலுத்தவேண்டும் என்கின்ற அறிவும் இல்லை. பஞ்சமும் நோயும் பயமும் தாண்டவமாடுகிறது. நாட்டின் வளப்பத்தைப் பெருக்க வைக்கத் தெரியவில்லை. வரிதான் அடிக்கடி உயர்த்தப்படுகிறது. அது பெரிதும் ஏழைகள் மீதே ஏறும்படி சுமத்தப்படுகிறது. வளப்பம் பெருகவில்லை, ஏழைகளிடம் பொருளாதாரம் வளரவில்லை. உதாரணமாக நம் நாட்டு விவசாயம் பெருகவேயில்லை. 100 வருடத்திற்கு முன் விளைந்த விகிதம்தான் இன்றும் நம் பூமியில் விளைவு காணப்படுகிறது. இடாலி, பிரான்ஸ், ஸ்பெயின் முதலிய தேசங்களில் சென்ற 50 வருடத்திற்கு முன் விளைந்ததைவிட இன்று ஒரு எக்கர் பூமியில் இரண்டு பங்கு அதிகமாக அதாவது 1-க்கு 3-பங்காக அதுவும் நல்ல சத்துள்ள பண்டங்கள் கொண்ட வெள்ளாமை பலன் கொடுக்கிறது. இங்கோ இப்படிக் கவலை அற்ற, வளர்ச்சியற்ற தன்மையில் "விவசாய அபிவிருத்தி" ஆகியிருக்கிறது. இதுபோலவே நாட்டுக் கைத்தொழிலும் வளம் பெறாத முறையில் தொழிலாளிக்கும், ஏழைக்கும் பயன்படாத முறையில் நடைபெறுகின்றன. காரணம் அத்துறையில் சர்க்காருக்குப் போதிய அறிவில்லாததும், தக்க பொறுப்பு இல்லாததுமேயாகும். இவைகளை அப்படியே விட்டு விட்டுத் தங்கள் தங்கள் சுயநலத்துக்கு மாத்திரம் வகுப்புப் பெயரை வைத்துக்கொண்டு, கட்சிப் பெயரை வைத்துக்கொண்டு எங்கும் சூழ்ச்சி, காலித்தனம் நடைபெறுகிறது.

## மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை.

எங்கு பார்த்தாலும் கதவடைப்பு, எங்கு பார்த்தாலும் துப்பாக்கிப் பிரயோகம், சர்க்காருக்குள்ளாகவே கட்சி, மந்திரிகளுக்குள் கலவரம், பொறாமை, ஒருவரை ஒருவர் கவிழ்க்கும் சூழ்ச்சி, வகுப்பின் பேரால் கட்சி, மதத்தின் பேரால் கட்சி, இனத்தின் பேரால் கட்சி இருந்து தொல்லை கொடுக்கின்றன. தேசியப் பத்திரிகைகள் என்பவைகளுக்கு ஜாதி, மத, வகுப்பு, இனப் போராட்டங்களைத் தூண்டி விடுவதும், வகுப்புக்கு வகுப்பு, இனத்துக்கு இனம், மதத்துக்கு மதம், ஜாதிக்கு ஜாதி முட்டிக்கொள்ளும்படியான சேதிகள் பிரசுரித்து மக்களைப் பிரித்துப் பலமற்ற கட்டுப்பாடற்றசமுதாயமாக்குவதே கொள்கையாகி விட்டது. சாந்தமின்மையும், சமாதானமின்மையும், உண்டாக்கி விட்டு அதன்

# ஆணவ அகங்கார மத்திய ஆட்சி. அனைத்தும் அதன் காலடியில்.

பேரால் பிழைப்பதே வேலையாகி விட்டது. பார்ப்பன மந்திரிகளையும், அதிகாரிகளையும் பார்ப்பனரல்லாத மக்கள் வெறுப்பதும் குறைகூறுவதும், பார்ப்பனரல்லாத மந்திரிகளையும், அதிகாரிகளையும் பார்ப்பன மக்கள் கட்டுப்பாடாக வெறுப்பதும், குறைகூறுவதும், விஷமப்பிரசாரம் செய்வதும் அவைகளுக்கு மதக்கட்டளைகள் போல் ஆகி விட்டன. ஒருவன் காங்கரசைச் சேர்ந்தவனானால் அவன் என்ன அக்கிரமம், அட்டூழியம் வேண்டுமானாலும்செய்யலாம், கேள்வி கேட்பார் இல்லை. காங்கரசல்லாதவன் எது செய்தாலும் குற்றம் என்பதும், அவனுக்குத் தொல்லை கொடுப்பதும் என்கின்ற நிலை தாண்டவமாடுகிறது. உணவுப் பஞ்சம், உடைப் பஞ்சம், வாழ்க்கைக்கு இன்றியமையாத பண்டங்கள் பஞ்சம், வியாபாரிகளின் கள்ள மார்க்கட்டு, அநியாயக் கொள்ளையும் இவைகளுக்குச் சர்க்காரின் கவலையற்ற தன்மையும், சுயநலமடைந்து தப்பு வழியில் ஆதரவு தருவதும், எல்லையற்றதாக ஆகிவிட்டன. சர்வத்தையும் சர்க்கார் தன் கால் மிதியில் அடக்கிக் கொண்டு, ஒன்றைக்கூட நேராய், நாணயமாய் நிர்வகிக்க முடியாத, தெரியாத தன்மையில் இருந்து வருகிறது. காலை ஒரு உத்திரவு, பகல் ஒரு உத்திரவு, மாலை ஒரு உத்திரவு என்கின்ற மாதிரியில், ஒரு முறையோ நிலையோ அற்ற முறையில் நிர்வாக உத்திரவுகள் பறக்கின்றன. பொதுவாகச் சொன்னால் மக்களுக்கு எவ்விதப் பாதுகாப்பும் வசதியும் அற்ற தன்மையில், கை வலுத்தவன், காலித்தனத்தில், தந்திரத்தில் வலுத்தவன் காரிய சித்தி அடையும்படியாக இருக்கிறதே தவிர, யோக்கியர்களுக்கும், சாதுக்களுக்கும், பாமர மக்களுக்கும் வாழ்க்கை பெரும் கஷ்டமாக, ஆபத்தாகவே இருந்து வருகிறதென்னலாம். இவ்வளவு என் சொல்ல வேண்டும்? மந்திரிகளுமே அதுவும் மத்திய அரசாங்க மந்திரிகளே பாதுகாப்பில், முள்வேலிக்குள் பாதுகாக்கப்பட வேண்டியவர்களாக, நித்திய கண்டமாக இருக்கிறார்கள் என்றால், பதவியைவிட்டு அடிக்கடி ஓடுகிறார்கள், மாறுகிறார்கள் என்றால் இனி மக்களுக்கு நிலை எது? பாதுகாப்பெது?

இந்த லட்சணத்தில் மத்திய அரசாங்கம் மாகாண அரசாங்கம் என்கின்ற பிரிவு வேறு, மத்திய ஆட்சிக்கு எதற்கும் "ஒரு கை பார்த்தே தீருவோம்" என்கின்ற ஆணவம் அகங்காரம் வேறு என்றால் இது வெகு வேடிக்கைக் கூத்தாகும். உண்மையில் சர்வத்தையும் தன் காலடியில் வைத்துக்கொண்டு ஆட்சிபுரிவது அதுவும் பேய் ஆட்சிபுரிவது மத்திய அரசாங்கம் தான் என்று சொல்லலாம். மாகாண அரசாங்கம் என்பது வெறும் வேஷமும், விளையாட்டுத்தனமுமே யாகும். மாகாண அரசாங்கம் என்பது காங்கரசுக்கு தொண்டாற்றின மாகாண தேசபக்தர் தியாகிகள் என்பவர்களுக்கு அவரவர் சொந்த நலனுக்கு பயன் ஏற்படுத்திக் கொள்ளும் படியாக (லைசென்சு) அளித்த கைம்மாறு சன்மானமேயொழிய, மாகாண மக்களுக்கு யாதொருவிதமான அரசியல் உரிமை என்று எதையும் சொல்லிவிடமுடியாது. மாகாண மந்திரிகள், மத்திய அரசாங்கப் பிரமுகர்கள் தயவில் வாழவேண்டியவர்கள் ஆனதால் மாகாணத்துக்கு அளித்திருப்பது மாகாண சுயாட்சி என்றால், மாகாண மந்திரிகள், ஆம்! இது மாகாண சுயாட்சிதான் என்று சிலர் சொல்லிக் கொண்டு தங்களுக்கும், தங்கள் நண்பர்களுக்கும், பணம், பதவி, முன்பு பாடுபட்டதற்குக்கைம்மாறாக அனுபவித்து வருகிறார்கள்.

## மக்கள் பிரதிநிதித்துவம்

மத்திய அரசாங்கத்திலோ, மாகாண அரசாங்கத்திலோ மக்கள் பிரதிநிதிகள் இருக்கிறார்கள் என்று யாருமே சொல்லிக்கொள்ள வழி இல்லாத மாதிரியில் அதாவது 1935-ல் வெள்ளைக்காரன் தனது பாதுகாப்புக்காகப் பார்ப்பனருக்கும் பணக்காரருக்கும் சலுகையாகக் கொடுத்த சீர்திருத்தச் சட்டத்தின்படி ஏற்பட்ட பிரதிநிதித்துவமே ஒழிய, இன்று அரசாளுவது சுயராஜ்ஜியம் என்பதின்படி மக்கள் பிரதிநிதித்துவ ஆட்சி என்று சொல்லுவதில் சிறிதும் உண்மையும் நாணயமுமிருக்க முடியாது. 1935-ம் வருட சீர்திருத்தம் 100-க்கு 10-பேருக்கு மாத்திரம் ஓட்டுரிமை உள்ள சீர்திருத்தமாகும். இது நான் முன் சொன்னபடி மக்களுக்குச் சுதந்தரமில்லாதபோது அன்னிய ஆட்சி இருக்கும்போது ஏற்பட்டதாகும். அதைச் சுதந்தரமல்லவென்றும், அது போதாதென்றும் சொல்லித்தான், அதுவும் அந்தச்சட்டம் சரிவரப்படித்தவர்களாலேயே சொல்லித்தான் மக்களை நம்பச்செய்து கிளர்ச்சி செய்துதான் "வெள்ளையன் வெளியேற்றப்பட்டான்" என்கிறோம். அப்படி இருக்க இன்று சுயராஜ்ஜியம் வந்த பிறகு, ஆட்சி நம் கைக்கு வந்த பிறகு, அந்தச் சட்டப்படி ஆள்கிறவர்கள் மக்கட் பிரதிநிதிகளா? அல்லது வெள்ளையர்கள் நிலையில் இருக்கும் கொள்ளையர்கள் பிரதிநிதிகளா? என்பது யோசிக்கத் தக்கதாகும்.

அன்றியும் அப்படிப்பட்ட நிலை, "தற்கால சாந்தியாக தற்காலத்துக்குத்தான் வைக்கப்பட்டதாகும். இனி சீக்கிரம் உண்மை ஜனநாயகமாக்கப்படும்" என்று சாக்குச் சொல்லப்படுமானால், இனி வருங்கால ஆட்சிக்கு, ஜனநாயக ஆட்சிக்காக வகுக்கப்படும் அரசியல் திட்டங்களைச் செய்யவேண்டியவர்கள் பொது ஜனங்களுடைய ஜனநாயகப் பிரதிநிதிகளா? வெள்ளையர்கள் ஏற்பாடு செய்த ஜாதித்திமிரர்கள், கொள்ளையர்கள் பிரதிநிதிகளா? அல்லது வெள்ளையர்கள் இஷ்டப்படி வெள்ளையர் (அன்னியர்) அரசியல் திட்டப்படி சுரண்டுபவர்களுக்கே வசதி இருக்கும்படி அவர்கள் ஏற்பாடு செய்து விட்டுப்போன பிரதிநிதிகளா என்று கேட்கிறேன்?

## அரசியல் பிரதிநிதி சபை.

இன்றைய அரசியல் பிரதிநிதி சபை யாரால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டது? அவர்களைத் தெரிந்தெடுத்தவர்கள் யார்? தெரிந்தெடுத்தவர்களைத் தெரிந்தெடுத்தவர்களும், அரசியல் நிர்ணய சபைக்கு தெரிந்தெடுக்கப் பட்டவர்களும் எந்தத் தன்மையில் பொது மக்கள் பிரதிநிதிகள் ஆனார்கள்? இவர்களை யார் தெரிந்தெடுத்தார்களோ அவர்களுக்காவது பொதுமக்கள் (அதாவது ஓட்டர்கள்) அரசியல் பிரதிநிதி சபை பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் உரிமை கொடுத்தார்களா? இந்தப் பேச்சோ, இப்படிப்பட்ட சம்பவம் ஏற்படும் என்கிற கருத்தோ, நினைவுக்கு வர ஹேதுவோ ஏதாவது அந்தக் காலத்தில் இருந்தது என்று யாராவது சொல்ல முடியுமா? என்று கேட்கிறேன்.

எனவே இன்றைய ஆட்சியானது பொதுமக்கள் பேரால் கையில், தந்திரத்தில், சுயநலத்தில் வலுத்த ஒரு கூட்டுக்கொள்ளைக் கோஷ்டியாரின் ஆட்சி என்று சொல்லத்தான் வயப்பட்டதாகலாமே தவிர இந்நாட்டு மக்களின் பிரதிநிதித்துவ ஆட்சி என்று சொல்லச் சிறிதும் இடமில்லை. விளக்கத்துக்காகத் திரும்பவும் சொல்லுகிறேன். 1935-ம் ஆண்டு சீர்திருத்தத்தில் 100-க்கு 12 பேருக்கே ஓட்டு உண்டு. அதுவும் படித்தவருக்கும், பணக்காரர்களுக்கும், சொத்துடையவர்களுக்கும்தானே ஒழிய படியாத, சொத்தில்லாத பாட்டாளி மக்களாகிய 100-க்கு 90 பேர்களுக்கு ஓட்டு கிடையாது. இதற்குக் காரணம் "அன்னியனுடைய ஆட்சி" என்று சொல்லலாம். ஆனால் இப்படிப்பட்ட பிரதிநிதித்துவம், சுயராஜ்ஜியத்துக்கும், மக்கள் ராஜ்ஜியத்துக்கும், பாட்டாளி மக்கள் ராஜ்ஜியத்திற்கும் ஏற்றதாகுமா என்று கேட்கிறேன். (தொடரும்)

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE